# கொலுசுச் சத்தம்

## 1

சிறுவாணி ஃபாரஸ்ட் சாயந்திர நேர ஒளியினை விழுங்கிக் கொண்டிருக்க - இருட்டு திருட்டுத்தனமாய் சகல திசைகளிலும் நுழைந்து கவிந்து கொண்டிருந்தது. பறவைகள் சற்று இரைச்சலோடு - மரங்களில் இறங்க - காற்றில் குளிரின் சதவீதம் ஏறியது.

எப்போதோ போட்ட அந்த செம்மண் பாதையில் 'ஆர்மெண்டோ' ஜீப் ஒன்று நிதானமான வேகத்தில் போய்க் கொண்டிருக்க, ட்ரைவிங் சீட்டில் அந்த இளைஞனும் - பக்கத்திலேயே அவன் தோளில் சாய்ந்தபடி அந்தப் பெண்ணும் தெரிந்தார்கள்.

இளைஞனுக்கு வயது முப்பதுக்குள் இருக்கலாம். எழுந்து நின்றால், அபாரமான உயரத்தைக் காட்டுவான் போல் தெரிந்தது. பொது நிறம். நாசி மோவாய் தீர்க்கம். அடர்த்தியான தலைக்கேசம் காற்றுக்கு அசைய மறுத்தது. காலர்



இல்லாத டீ ஷர்ட் பனியன். பனியன் வாசகம் 'ஐ ஹேவ் யூ அண்ட் ஐ லவ் யூ' என்று சொன்னது. உதட்டில் சிகரெட். கழுத்தில் டாலர் செயின்.

அந்தப் பெண்ணுக்கு சமீபத்திய எல்லா சினிமா நடிகைகளின் சாயல் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது. ரோஜா நிறம். மை தீட்ட வேண்டிய அவசியமே இல்லாதபடிக்கு கண்கள். உதட்டில் உறைந்திருந்த சிவப்பு நிறம் - நான் லிப்ஸ்டிக் இல்லை என்று சத்தியம் செய்யத் தயாராக இருந்தது. பல் வரிசையைப் பிறகு பார்க்கலாம். கட்டியிருந்த சேலை நெகிழ்ந்திருந்தது. காரணம் இளைஞன் கழுத்தில் சென்ற வாரத்து தாலி. தாலிக் கொடியில் இன்னமும் மஞ்சள் தெரிந்தது.

''என்னங்க...''

அவள் கொஞ்சியபடியே - தன் அழகான மூக்கை அவனுடைய கன்னத்தில் தேய்த்தாள்.

மூச்சுக் காற்றில் பெப்பர்மிண்ட் வாசம்.

இளைஞன் தன் தலையை மெல்ல சாய்த்து - அவளுடைய நெற்றியில் இடித்தான். ''என்னவாம்...?''

''குளிருது...''

''கட்டிப் பிடிச்சுக்கோயேன், நான் என்ன தண்டத்துக்கா உனக்கு தாலி கட்டியிருக்கேன்...?''

அவன் அவள் இடுப்பில் கைபோட்டு வளைத்து இழுத்து தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''இப்ப எப்படி இருக்கு...?''

''கதகதன்னு கம்பளி ஸ்வெட்டர் போட்டுகிட்ட மாதிரி இருக்கு...''

''இன்னும் கொஞ்சம் இறுக்கிப் பிடியேன்.''

''எனக்கு மூச்சு முட்டுது...''

அவள் சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கும்போதே - தலையில் விறகுச் சுமையோடு வெற்று மார்பும் இடையில் லுங்கியுமாய் அந்த ஆள் எதிர்பட்டான்.

இளைஞன் ஜீப்பை அவனுக்குப் பக்கத்தில் கொண்டு போய் நிறுத்தினான். தலையை வெளியே நீட்டிக் கூப்பிட்டான்.

''இந்தாப்பா...''

அவன் பக்கத்தில் வந்தான்.

''திவான் ரத்ன சபாபதிக்குச் சொந்தமான கெஸ்ட் ஹவுஸுக்கு இந்த வழியில்தானே போகணும்...?''

அவன் பிரமித்து - ''பங்களாங்களா...?'' என்றான்.

''ஆமா...''

''இப்படியே நேரா ஒரு கல்லு தூரம்... நடந்தாக்க பங்களா... வந்துடுமுங்க...''

''போகப் போக வழி எப்படி இருக்கும்...?''

''இதே மாதிரிதாங்க இருக்கும்... குருதியோடைக்குப் பக்கத்துல ரோட்டு மண் சரிஞ்சிருக்கும். ப்ளஷரை பாத்து ஒட்டணுங்க...''

ஜீப்பைக் கிளப்பினான் இளைஞன்.

''அதென்ன குருதியோடை?'' அவள் கேட்டாள்.

''யார்க்குத் தெரியும்...? நானும் இந்த ஏரியாவுக்கு உன்னை மாதிரி புத்தம் புதுசுதான்...''

''நாம இந்த காட்டுக்கு வந்திருக்க வேண்டாம்...?''

''ஏன் அப்படிச் சொல்றே...?''

''என்னதான் சந்தோஷமா இருக்க நினைச்சாலும் மனசுக் குள்ளே 'திக் திக்'ன்னு இருக்கு... நாம ஹனிமூன் போக இந்த தமிழ்நாட்ல வேற இடமா கிடைக்கலை. பாருங்க 'ஹோ'ன்னு.



எந்தப் பக்கம் பார்த்தாலும் பிசாசு நின்னுட்டிருக்கிற மாதிரி மரங்க. நாலைஞ்சு நாளை கெஸ்ட் ஹவுஸ்ல எப்படி கழிக்கப் போறோமோன்னு இருக்கு...''

இளைஞன் சிரித்தான்.

''அந்த கெஸ்ட் ஹவுஸ்ல தங்கறதுக்கு நீயும் நானும் குடுத்து வெச்சிருக்கணும்... எப்பேர்ப்பட்ட கட்சித் தலைவர்கள், சினிமா நடிகர் நடிகைகளெல்லாம் வந்து தங்கின பங்களா தெரியுமா அது...?''

''உங்க ஃப்ரெண்ட் பங்களாவாச்சே அது...? விட்டுக் குடுத்துப் பேசுவீங்களா...''

''நான் அதுக்காகச் சொல்லலை மதுலிகா... சிறுவாணி ஃபாரஸ்ட் உண்மையிலேயே ஒரு அற்புதமான இடம். காட்டு மிருகங்களோட தொந்தரவு இல்லாத ஃபாரஸ்ட் இந்த இந்தியாவிலேயே இது ஒண்ணுதான். பார்க்கிறதுக்கு ஃபாரெஸ்ட் பயத்தை குடுக்கிற மாதிரி இருக்குமே தவிர ரொம்ப சாது. சிறுவாணி அருவி தண்ணி ரொம்ப ஸ்வீட். இளநீரைக் காட்டிலும் இனிப்பான வாட்டர். வீசற காத்துல மூலிகை வாசம். புதுமணத் தம்பதிகள் இந்த கெஸ்ட் ஹவுஸில் தங்கிட்டு போன பின்னாடி அந்தப் பொண்ணு கர்ப்பம் தரிச்சா...''

''தரிச்சா...?''

''குழந்தை ஆரோக்கியமாப் பிறக்குமாம்...''

''உங்க ஃப்ரண்ட் ரவிஷங்கர் விட்ட உடான்ஸா இது...?''

''உடான்ஸ் இல்லை மதுலிகா. நிஜம்...''

''அது சரி... இந்தக் காட்டுல நாலைஞ்சு நாள் இருந்தே ஆகணுமா...?''

''கண்டிப்பா...''

"போரடிக்குமே...?"

"போரடிச்சா செஸ் விளையாடலாம்."

"அது பயங்கர போர்..."

"அப்படின்னா செக்ஸ் விளையாடலாம்..."

"ச்சீ...!"

"என்ன ச்சீயா... இப்படி 'ச்சீ' சொல்லத்தான் ரெண்டு லட்ச ரூபாய் செலவு பண்ணி உங்கப்பா உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணிக் குடுத்தாரா? ஊருக்குப் போனதும் உங்கப்பா கிட்டே கேக்கப் போறேன்..."

"என்ன கேப்பீங்களாம்...?"

"மிஸ்டர் பஞ்சாபகேசன்...!"

"என்ன மரியாதை இல்லாமே அப்பாவோட பேரைச் சொல்றீங்க?"

"ஸாரி... உணர்ச்சி வசப்பட்டுட்டேன். மிஸ்டர் மாமா...! உங்க பொண்ணை நீங்க எந்தக் காரணத்துக்காக கல்யாணம் பண்ணிக் குடுத்தீங்களோ... அது... இன்னும்."

மதுலிகா தன் இடது கை விரல்களால் அவனுடைய வாயைப் பொத்தினாள். கத்தினாள். "இது அபாண்டம்... அபாண்டம்..."

"அபாண்டமா...?"

"ம்... இது அந்த மன்மதனுக்கே பொறுக்காது. நீங்க என் கழுத்துல தாலி கட்டின ராத்திரியிலிருந்து நேத்து ராத்திரி வரைக்கும்..."

வெட்கத்தோடு நிறுத்தினாள் மதுலிகா.

"ம்... சொல்லு... நேத்து ராத்திரி வரைக்கும்..."

"நான் முழுசா... ரெண்டு மணி நேரம் கூட சேர்ந்த மாதிரி தூங்கலை. ராத்திரியானா கடுவன் பூனையாட்டம் ஒரே



ரகளைதான். உங்க நகம் பட்டு என் உடம்புல எவ்வளவு கீறல் தெரியுமா...?"

"இன்னிக்கு ராத்திரி எண்ணிப் பார்த்துடறேன்..."

"யூ... யூ..."

கணவனின் தலைக்கேசத்தைப் பற்றி, ஆவேசமாய் உலுக்கினாள் மதுலிகா. ஆர்மெண்டோ ஜீப் தாறுமாறாய் ஓடி பாதையோரத்தில் வளர்ந்திருந்த சில குற்றுச் செடிகளை துவம்சம் செய்தது.

"ஏ... ஏய்... விடு..."

"விட மாட்டேன்..."

"அய்யோ... வலிக்குது..."

"நல்லா வலிக்கட்டும்..."

"அய்யோ விடேன்..."

"இனிமே அசிங்கமாப் பேசுவீங்களா?"

"மாட்டேன்... மாட்டேன்..."

பிடியை விட்டாள் மதுலிகா.

"பிசாசு...!"

ஜீப், குருதியோடை என்று எழுதப்பட்ட, ஒரு பழைய பெயர்ப் பலகையைக் கடந்து குண்டும் குழியுமான ரோட்டில் பல்லாங்குழி ஆடியது. ஒரு சிதிலமான பாலத்துக்கு கீழே தண்ணீர் சலசலத்து ஓடும் சத்தம் கேட்டது.

"பாலம் இவ்வளவு மோசமா இருக்கு...?"

"இங்கிலீஷ்காரன் காலத்துல கட்டினது. பழசாய் இருந்தாலும் ஸ்ட்ராங்கா இருக்கிறதை கவனிச்சியா?"

"ம்... ம்" என்று தலையாட்டிய மதுலிகா சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுச் சொன்னாள் -

"ரொம்பவும் இருட்டிடுச்சு..."

"ஹெட்லைட்டைப் போட்டுக்கலாம்."

போட்டாள்.

ஜீப்பின் முன்பக்கம் வெளிச்ச மழை. பாதையின் இரண்டு பக்கங்களிலும் மண்டியிருந்த புதர்களும், குற்றுச் செடிகளும் விடாப்பிடியாய் கூடவே வந்தன. அடித்த குளிர் காற்றில் ஏதோ ஒரு பச்சிலையின் மணம் நாசித் துவாரங்களில் ரம்யமாய் ஏறியது.

"என்னங்க..."

"ம்..."

"நிஜமாவே இந்த காட்ல அனிமல்ஸ் இருக்காதா?"

"நாம பயந்துகிட்டு வர்ற அளவுக்கு புலி, சிங்கம், யானை, கரடின்னு பயங்கர மிருகங்கள் கிடையாது."

"வேற எதுதான் இருக்கும்...?"

"மான், வரையாடு, முயல்... வரையாட்டு கறி ரொம்ப டேஸ்ட்டா இருக்கும். அதே மாதிரி முயலை அடிச்சு காரக் குழம்பு வெச்சு சப்பாத்தி பரோட்டாவோடு சாப்பிட்டா அடடா...!"

இளைஞன் நாக்கை சப்பு கொட்டிக் கொண்டே - மூங்கில் புதர்கள் கொண்ட வளைவைக் கடக்க - எதிரே அந்தக் கட்டிடம் ஹெட்லைட் வெளிச்சம் பட்டு ஒரு வினாடி தெரிந்து மறைந்தது.

"அந்த பங்களாதானா...?"

"அதுவாத்தான் இருக்கணும்."

"மரத்துல ஏதோ சின்னதா போர்டு அடிச்சிருக்காங்க... அது என்னான்னு பாருங்க..."



வண்டியின் வேகத்தைக் குறைத்து அந்தச் சிறிய போர்டை படித்தான் இளைஞன்.

**'திவான் ரத்னசபாபதி கெஸ்ட் ஹவுஸுக்குப் போகும் வழி.'**

"ம்... இப்படியொரு போர்டு வரும்ன்னு ரவிஷங்கர் சொன்னானே..."

ஜீப்பை அம்புக் குறி காட்டிய பாதையில் நுழைத்தான். ஹெட்லைட் வெளிச்சம் முன்னால் பீறிட்டு விழ - கட்டிடம் இப்போது தெரிந்தது. பாசி பிடித்த காம்பௌண்ட் சுவர் பிரதானமாய் கண்ணில் பட்டது.

ஜீப் கட்டிடத்தை நெருங்கி - சாத்தப்பட்டிருந்த காம்பௌண்ட் கேட்டுக்கு முன்பாய் நின்றது.

பெயிண்ட் உதிர்ந்து - துருப் பிடித்துப் போயிருந்தது கேட். கேட்டின் முகப்பில் அந்தக் காலத்திய க்ரில் ஆர்ச் ஆர்.எஸ். கெஸ்ட் ஹவுஸ் என்றது.

ஹார்ன் கொடுத்தான்.

"ப்பீங்க்க்க..."

ஹார்ன் சத்தம் அந்தக் காட்டுப் பிராந்தியத்தில் நிலவியிருந்த நிசப்தத்தை சின்னாபின்னப்படுத்த, காம்பௌண்ட் கேட் திறக்கப்படுவதற்காக இரண்டு பேரும் காத்திருந்தார்கள்.

நிமிஷ நேரம் காத்திருந்தபின் - மறுபடியும் ஹார்னை அழுத்தினான். இந்தத் தடவை நீண்ட ஹார்ன்.

"ப்ப்ப்ப்பீங்க் க்க்க...."

மறுபடியும் நிசப்தம்.

மதுலிகா கணவனை ஏறிட்டாள். "என்னங்க இது! கெஸ்ட் ஹவுஸ்ல நமக்காக வாட்ச்மேன் காத்திட்டிருப்பான்னு சொன்னீங்க...! கேட் கிட்டே யாரையும் காணோமே..."

"அதானே...?"

ஆச்சர்யப்பட்டுக் கொண்டே இளைஞன் கீழே இறங்கி காம்பௌண்ட் கேட்டை நெருங்கினான்.

கேட்டில் பூட்டு தொங்கியது.

இறங்கி வந்த மதுலிகாவும் ஆச்சர்யித்தாள்.

"என்னங்க... கேட் பூட்டியிருக்கு... நாம வர்றது வாட்ச் மேனுக்கு தெரியுமா... தெரியாதா...?"

"தெரியுமே...! என்னை முன்னாடி வெச்சுகிட்டு தானே ரவிஷங்கர் கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேனுக்கு போன் பண்ணி னான். சாயந்தரம் ஏழு மணிக்குள்ள வந்துடுவாங்க... ராத்திரி சமையலுக்கு இன்னின்ன அயிட்டம் வேற பண்ணனும்ன்னு போன்ல சொன்னானே...?"

மதுலிகா காம்பௌண்ட் கேட்டின் இடைவெளி கம்பிகள் வழியாக உட்புற பங்களாவைப் பார்த்தாள். மரங்களுக்கு மத்தியில் அது உட்கார்ந்திருந்தது.

மனசுக்குப் பிடிக்கவில்லை.

அதற்குள் ஏதோ ஒரு தப்பு ஒளிந்து கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு மதுலிகாவை ஆட்கொண்டது.

கணவனின் தோளைத் தொட்டாள்.

"என்னங்க..."

"ம்..."

"போயிடலாம் வாங்க..."

"என்னது... போறதா...? காம்பௌண்ட் கேட்டை பார்த் துட்டுப் போறதுக்காகவா இவ்வளவு தூரம் வந்திருக்கோம்...?"

"வாட்ச்மேன் இல்லையே...?"

"வந்துடுவான்... பக்கத்துல எங்கேயாவது போயிருப் பான். ஜீப்ல உட்கார்ந்து வெயிட் பண்ணுவோம் வா..."



ஜீப்பை நோக்கி வந்தவர்களின் காதுகளில் அந்த சத்தம் விழுந்தது. உன்னிப்பாய்க் கேட்டார்கள்.

"ஜல்... ஜல்..."

கொலுசு சத்தம்.

## 2

"என்னங்க...!"

"ம்..."

"கொலுசுச் சத்தம் கேட்டுதா...?"

"ம்... நல்லாவே கேட்டுது... ஆனா எந்தப் பக்கம் இருந் துன்னுதான் தெரியலை... ஆறரை மணிக்கே இப்படி இருட் டுமா என்ன...?"

"அதோ...! அந்தப் பக்கமா பாருங்க... ஒரு சின்ன வெளிச்சம் தெரியுது..."

தலையைத் திருப்பிப் பார்த்தான்.

ஒரு சுடர் அசைந்து அசைந்து வந்தது.

"அரிக்கேன் விளக்கு மாதிரி தெரியுது..."

பார்த்துக் கொண்டே நிற்க - விளக்குப் பக்கத்தில் வந்தது. விளக்கு வெளிச்சத்தில் அந்தப் பெண்ணின் முகம் தெரிந்தது.

இளம்பெண்.

கறுப்பு நிறம். ரொம்பவே - அழகாயில்லை. மேடிட்ட நெற்றி. மேலுதட்டுக்கு மேல் அதிகப் பிரசங்கித்தனம் செய்யும்

பல் வரிசை. கைகளில் பிளாஸ்டிக் வளையல். கழுத்தில் பாசி மணி. பொருந்தாத நிறங்களில் பாவாடை, தாவணி, ஜாக்கெட்.

கேட்டாள்.

"டவுன்லேர்ந்து வர்றீங்களா...?"

"ஆமா..."

"உங்க பேரு... 'சரவணகுமார்'ங்களா?"

"ஆமா..."

"நீங்க வந்தா இந்தக் கடுதாசியைக் குடுக்கச் சொன்னாரு வாட்ச்மேன் அய்யா."

"கடுதாசியா...?"

"ஆமாங்க..." - சொன்னவள் தன் இடுப்புப் பாவாடையைத் தொட்டு அந்தக் கடிதத்தை எடுத்து நீட்டினாள்.

நான்காய் மடிக்கப்பட்டிருந்த - ஒரு பழைய காகிதம்.

சரவணகுமார் அதைப் பிரித்தான். பென்சிலால் கொட்டை கொட்டையான எழுத்துக்களில் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

**மதிப்புக்குரிய திரு. சரவணகுமார் அய்யா அவர்களுக்கு வாட்ச்மேன் நல்லகண்ணு பணிவாய் எழுதிக் கொண்டது. அய்யா! என் மனைவிக்கு கடுமையான வயித்துவலி. டவுன் ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போக வந்துவிட்டது. நீங்கள் வருகிற நேரம் நான் பங்களாவில் இருக்கமாட்டேன். சாவியை செல்லி என்ற பெண்ணிடம் கொடுத்துள்ளேன். செல்லி வேண்டிய உதவிகளை உங்களுக்குச் செய்வாள். நான் நாளைக் காலையில் பங்களாவுக்கு திரும்பி விடுவேன். இது குறித்து பெரிய அய்யாவிடம் டெலிபோனில் பேசி விட்டேன். இப்படிக்கு வாட்ச்மேன் நல்லகண்ணு.**

சரவணகுமார் கடிதத்தை மதுலிகாவிடம் கொடுத்துக் கொண்டே, எதிரில் இருந்த பெண்ணை ஏறிட்டான்.



"உன் பேர்தான் செல்லியா...?"

"ஆமாங்கய்யா..." - சொன்னவள் இடது உள்ளங்கையில் மறைத்து வைத்திருந்த சாவிக் கொத்தை நீட்டினாள்.

சரவணகுமார் வாங்கிக் கொண்டே கேட்டான்:

"வாட்ச்மேனுக்கு நீ என்ன ஆகணும்...?"

"சொந்தமெல்லாம் இல்லீங்க... எங்க அப்பாவும் அவரும் சிநேகிதங்க அவ்வளவுதான்... இங்கிருந்து கொஞ்ச தூரத்துல தான் என்னோட வூடு. அதான் உங்க ஜீப் சத்தத்தைக் கேட்டதும் வேகவேகமா வந்தேன்..."

"நல்லகண்ணு எத்தினி மணிக்கு டவுன் ஆஸ்பத்திரிக்கு புறப்பட்டுப் போனான்...?"

"அஞ்சு மணி இருக்கும்."

சரவணகுமார் கையிலிருந்த சாவிக்கொத்தால் - காம்பௌண்ட் கேட்டின் பூட்டுக்கு தோதான சாவியை தேர்ந்தெடுத்து உள்ளே செலுத்தி 'க்ளிக்'கினான்.

பூட்டு வாயைப் பிளக்க -

கதவைத் தள்ளினான்.

"க்ரீச்..."

அந்த இரும்புக் கதவு பெரிய அலறலோடு பின் வாங்கியது. செல்லி கொலுசு சத்தத்தோடு உள்ளே நுழைய - சரவண குமார் மதுலிகாவோடு ஜீப்புக்கு வந்து அதை உள்ளே செலுத்தினான்.

மதுலிகா கணவனின் தோளைப் பற்றினாள். அவன் அவள் பக்கமாய் திரும்பினான்.

"என்ன...?"

"அந்தப் பொண்ணைப் பார்த்தாலே பயமாயிருக்குங்க..."

"பயமா...?"

"ம்... அவளும் அவளோட பார்வையும். போதாத குறைக்கு கொலுசுச் சத்தம் வேற..."

"காட்லேயே இருக்கிற பொண்ணு. கொஞ்சம் வித்தியாசமா அப்படித்தான் இருப்பா..."

"பங்களாவும் சரியில்லீங்க... ஏதோ பாழடைஞ்ச மாதிரி இருக்கு... நாம திரும்பிப் போயிடலாங்க..."

"திரும்பிப் போயிடறதா...? மதுலிகா! இயற்கையை ரசிக்க நீ பழகிக்கணும்... நாளைக்கு பகல் நேரத்துல இந்த ஃபாரஸ்ட்டைப் பார்த்தா நீ ரொம்பவும் லைக் பண்ணுவே..."

"நீங்க என்னதான் தைரியம் சொன்னாலும் சரி... என் மனசுக்குள்ளே 'திக் திக்'ன்னு இருக்கு."

போர்டிகோவின் மையத்திற்கு ஜீப்பைக் கொண்டு போய் நிறுத்தி கீழே இறங்கினான் சரவணகுமார். மதுலிகாவும் தயங்கிக் கொண்டே இறங்கி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

இருட்டு இப்போது எல்லா திசைகளிலும் அப்பியிருந்தது. ஏழெட்டு வகை பூச்சிகள் விதவிதமாய் ரீங்காரம் செய்தன.

"செல்வி..."

போர்டிகோ தூணோரம் நின்றிருந்த செல்வி சரவணகுமார் அழைத்ததும் பக்கத்தில் வந்தாள் "அய்யா...!"

"பங்களாவைச் சுத்தம் பண்ணியிருக்கா...?"

"பண்ணியிருக்கய்யா..."

"ராத்திரி சாப்பாடு...?"

"இனிமேத்தாங்க ஏற்பாடு பண்ணணும்."

சாவிக் கொத்தோடு பிரதான கதவை நெருங்கி இரண்டு மூன்று சாவிகளைப் போட்ட பின் - பூட்டு திறந்து கொண்டது.



கனமான தேக்குக் கதவு. முகப்பில் நிறைய பூ வேலைகள். தள்ளினான்.

கதவு சிரமமாய் உள்ளே போயிற்று.

கொட்டியிருந்த இருட்டில் ஹாலும் மாடிக்குப் போகும் படிக்கட்டுகளும் மெலிதாய் தெரிந்தது. சரவணகுமார் ஸ்விட்ச் போர்டைத் தேடி - கைக்கு கிடைத்த பட்டன்களைத் தட்டினான். ஹால் உடனே டியூப்லைட் வெளிச்சத்துக்கு வந்தது.

மதுலிகா பிரமித்தாள்.

"அடேங்கப்பா... எவ்வளவு பெரிய ஹால்...!"

நிறம் நிறமாய் கண்ணாடி ஜன்னல்கள். தொங்கும் லஸ்தர் விளக்கு. ஹால் சுவர்களில் ஆயில் பெயிண்ட் போர்ட்ரயிட்கள்.

மாடிப்படிகளை ஒட்டியிருந்த பக்கவாட்டு சுவரில் ரவி ஷங்கரும் அவனுடைய அண்ணன் க்ருபாஷங்கரும் ஆஃப் சைஸ் போட்டோக்களில் சிரித்தார்கள். எதிர்புறச் சுவரில் அவர்களைப் பெற்ற திவான் ரத்ன சபாபதியும் அவருடைய மனைவி வேதவல்லியும் வாடிய ரோஜா மாலையில் நேர் பார்வை பார்த்து பார்க்கிறவர்களை பயமுறுத்தினார்கள்.

"மதுலிகா..."

"ம்..."

"பங்களா எப்படியிருக்கு...?"

"நல்லாத்தான் இருக்கு. ஆனா..."

"சொல்லு..."

"எந்தப் பொருளைப் பார்த்தாலும் பழைய வாசனை அடிக்குது."

"எல்லாமே இங்கிலீஷ்காரன் காலத்து சமாச்சாரங்கள். வால் க்ளாக், சோபா, டீபாய், சாண்ட்லியர் லாம்ப்ஸ், கன்

ணாடி ஜன்னல்கள், விரிப்பு கம்பளம், மாடிப்படி கைப்பிடி... இப்படி எல்லாத்திலும் பழைய வாசனை அடிச்சாலும் அபூர்வமானவை... இது மாதிரியான திங்க்ஸை இந்தக் காலத்துல வாங்கவே முடியாது..."

சோபாவுக்கு வந்தார்கள்.

ரத்தநிற வெல்வெட் சோபாக்கள். கைப்பிடிகளில் ஈட்டி மரம் பளபளத்தது.

"செல்வி..."

"அய்யா..."

"எங்களுக்கு ரெண்டு டம்ளர் காபி வேணும்."

"நிமிசத்துல கொண்டாறேன் அய்யா..."

செல்வி உள்ளேயிருந்த சமையல்கட்டை நோக்கிப் போக - சரவணகுமார் மனைவியோடு சோபாவுக்கு சாய்ந்தான்.

மதுலிகா கணவனுக்குப் பக்கத்தில் ஒட்டிக் கொண்ட மாதிரி உட்கார்ந்து தன் இடது கை ஆட்காட்டி விரலால் அவனுடைய தொடையைச் சுரண்டினாள்.

"என்னங்க...?"

"மறுபடியும் தொணதொணக்க ஆரம்பிச்சுட்டியா...? அந்த பயம்தானே வேண்டாங்கறது...? ஹாஸ்டல்ல இருந்து பி.ஏ. வரைக்கும் படிச்சிருக்கே.. என்ன பிரயோஜனம்...?"

"வந்து... வந்து..."

"சொல்லு..."

"அ... அந்த... செல்வி...?"

"அந்த செல்வி?"

"என்னைப் பார்க்கிற பார்வையே ஒரு மாதிரியா இருக்குது. அவ என்னைப் பார்க்கிற ஒவ்வொரு தடவையும் அடி வயித்துல 'திக்'ன்னு இருக்கு..."



"அவ பார்க்கிற பார்வையை நானும் கவனிச்சேன். அந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம் தெரியுமா...?"

"என்ன அர்த்தமாம்...?"

"நீ அழகாச் செவச் செவன்னு ஒரு சினி ஆக்ட்ரஸ் மாதிரி இருக்கிறதை அவ பிரமிப்போடு பார்க்கிறா... அவ்வளவு தான்..."

"எனக்கென்னமோ அப்படிப் படலைங்க..."

"மனசைப் போட்டுக் குழப்பிக்காதே... அப்புறம் ஹனிமூன் ட்ரிப் அவஸ்தையாப் போயிடும்... வா... செல்வி காப்பி போட்டு கொண்டு வர்றதுக்குள்ளே பங்களாவைச் சுத்திப் பார்த்துடலாம்..."

சோபாவை விட்டு எழுந்த சரவணகுமார் ஹாலையொட்டி யிருந்த பக்கத்து அறைக்குள் நுழைந்தான்.

ஸ்விட்ச்சைத் தட்டி இருட்டை விரட்டினான்.

இரட்டைக் கட்டிலோடு விஸ்தாரமான படுக்கையறை. புதையப் புதைய கனமான ஃபோம். தலைமாட்டில் வார்ட் ரோப். இடது பக்கம் ட்ரஸ்ஸிங் டேபிள். பக்கத்தில் ஃப்ரிஜ். சின்னதாய் சோபா செட். கட்டிலின் 'ஹெட் ரெஸ்ட்'க்கு மேல் திட்டில் வயலட் நிற டெலிபோன்.

டெலிபோனைப் பார்த்ததும் சரவணகுமார் வேக வேக மாய் போய் ரிஸீவரை எடுத்து காதுக்கு கொடுக்க மதுலிகா கேட்டாள்.

"போன் யார்க்கு பண்றீங்க...?"

"ரவிஷங்கருக்கு..."

"எதுக்கு...?"

"எதுக்கா...? நல்ல கேள்வி கேட்டே மதுலிகா...? நாம இங்கே கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து சேர்ந்து விட்டதை ரவி ஷங்கர்க்குத் தெரியப்படுத்த வேண்டாமா...?"

''இங்கிருந்து எஸ்.டி.டி. பேச முடியுமா?''

''பேசலாமே...'' - சொன்னவன் டயல் பட்டன்களைத் தட்டினான். அந்த நிமிஷம் முடிவதற்குள்ளாக மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

''ஹலோ...''

''ஹலோ... பேசறது யாரு... ரவிஷங்கரா...?''

''நோ... நோ... நான் க்ருபா ஷங்கர். நீங்க யாரு?''

''ஸார்... நான் சரவணகுமார்... காலையில உங்க வீட்டுக்கு வந்திருந்தேனே...''

''ஓ... நீங்களா...? கெஸ்ட் ஹவுஸுக்கு போகணும்ன்னு சொல்லிட்டிருந்தீங்க...''

''இப்ப அங்கிருந்துதான் பேசிட்டிருக்கேன் ஸார்.''

''ஈஸிட்...? எத்தனை மணிக்குப் போய் சேர்ந்தீங்க?''

''ஜஸ்ட் அரைவ்ட் ஸார்...! ரவிஷங்கர் வீட்ல இல்லீங்களா...?''

''இல்லை. காலையில நீங்க வந்துட்டுப் போன பிறகு - அவன் காரை எடுத்துட்டு வெளியே போனவன் தான். இன்னும் வரலை. அநேகமா க்ளப்புக்குப் போயிருக்கலாம். ராத்திரி எட்டு மணிக்கு மேல்தான் வீட்டுக்கு வருவான். அவன்கிட்டே ஏதாவது சொல்லணுமா...?''

''நத்திங் டூ ஸே... நானும் என்னோட ஒய்ஃப்பும் சிறுவாணி கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து சேர்ந்துட்டோம்னு சொன்னாப் போதும்...''

''சொல்லிடறேன்... பை... த... பை... கெஸ்ட் ஹவுஸ் எப்படியிருக்கு...? உங்களுக்குப் பிடிச்சிருக்கா...?''

''அமர்க்களம்...''

''உங்க ஒய்ஃபுக்கு...?''

''ஃபாரஸ்ட் ஏரியாங்கிறதுனால கொஞ்சம் பயத்தோடு பிடிச்சிருக்கு...''

''லேடீஸுக்கு அப்படித்தான் இருக்கும். ரெண்டு நாள் போனா அந்த சூழ்நிலை பழகிடும்... வாட்ச்மேன் நல்லக்கண்ணு உங்களுக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் பண்ணிக் குடுப்பான். 'நான்-வெஜ்' சமையல் பண்றதுல அவன் எக்ஸ்பர்ட். முயல், மான், வரையாடுன்னு நாம எதைக் கேட்டாலும் சரி துப்பாக்கி எடுத்துட்டுப் போய் அடிச்சுக் கொண்டாந்துடுவான்...''

''ஸார்... ஒரு விஷயம்...''

''என்ன...?''

''நல்லக்கண்ணு இப்ப கெஸ்ட் ஹவுஸ்ல இல்லை. அவனோட சம்சாரத்துக்கு கடுமையான வயித்துவலியாம். டவுன் ஹாஸ்பிடலுக்கு கூட்டிப் போயிருக்கானாம்.''

''உங்களுக்கு யார் சொன்னது...?''

''செல்வின்னு ஒரு பொண்ணு...! வாட்ச்மேன் அவகிட்டத்தான் எனக்கு எழுதின ஒரு லெட்டரையும் கெஸ்ட் ஹவுஸ் சாவிக்கொத்தையும் கொடுத்துட்டுப் போயிருந்தான்...''

க்ருபாஷங்கர் சிரித்தார். ''வாட்ச்மேன் நல்லக்கண்ணுவோட பெண்டாட்டி ஒரு நிரந்தரமான வயித்துவலி கேஸ். திடீர் திடீர்ன்னு டவுன் ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போவான். வருவான். இன்னிக்கு எத்தனை மணிக்குப் போனானாம்...?''

''அஞ்சு மணிக்கு...''

''செல்வி கெஸ்ட் ஹவுஸில்தான் இருக்காளா...?''

''ஆமா ஸார்...''

"டோண்ட் ஒர்ரி... அவளும் நல்ல பெண்தான். உங்களுக்கு வேண்டிய வசதிகளை அவ பண்ணிக் குடுப்பா... என்ஜாய் த ஹனிமூன் ட்ரிப்."

"தேங்க்யூ ஸார்..."

"ரவிஷங்கர் க்ளப்பிலிருந்து வீட்டுக்குத் திரும்பியதும் உங்களுக்கு போன் பண்ணச் சொல்லட்டுமா...?"

"ப்ளீஸ்..."

சரவணகுமாரை ரிஸீவரை வைத்துவிட்டு மதுலிகாவிடம் திரும்பினான். "ரவிஷங்கர் வீட்ல இல்லை. அவனோட ப்ரதர் க்ருபாஷங்கர்தான் பேசினார். நைஸ் மேன். என்ன ஒரு இங்கிதமா பேசறார்...?"

"அவங்கள்ளாம் இந்த கெஸ்ட் ஹவுஸுக்கு எப்ப வருவாங்க?"

"நினைச்சப்ப வருவாங்க... போவாங்க... டவுன்லயிருந்து நாற்பத்திரெண்டு கிலோ மீட்டர் தானே...?"

"வந்து என்ன பண்ணுவாங்க...?"

"ரெஸ்ட் எடுப்பாங்க... அவ்வளவுதான். சாப்பிட வேண்டியது. தூங்க வேண்டியது... போர் அடிச்சா டி.வி. பார்க்க வேண்டியது..."

பேசிக்கொண்டே அறையினின்று வெளிப்பட்டு பக்கத்து அறைக்குள் நுழைந்தார்கள்.

ஸ்விட்ச்சைத் தட்டினான் சரவண குமார்.

அதுவும் ஒரு பெட்ரூம்.

அறை ரம்யமாய் இருந்தது. வால் பிக்சரில் தென்னை மரக் கூட்டம். அதன் வேர்களில், கடலலைகள் நுரையோடு மோதின.



அறையின் ஜன்னல்கள் திறந்திருக்க - காற்று ஜில்லென்று உள்ளே வந்து இரண்டு பேரையும் தழுவியது.

மதுலிகா ஜன்னல் அருகே போய் நின்றாள். ஜன்னல் கம்பிகளுக்கு வெளியே பங்களாவின் சொச்ச காலி பரப்பு இருட்டில் தெரிய -

அதன் நடுவே -

அரைக்கோள வடிவ சைஸில் - டூம் மாதிரி எதுவோ தெரிந்தது. மதுலிகாவின் நெற்றி சுருங்கியது. "என்னங்க... அது...?"

"எது...?"

"சுண்ணாம்பு அடிச்ச மாதிரி ஏதோ வெள்ளையா தெரியுதே?"

சரவணகுமார் உற்றுப் பார்த்துவிட்டு தலையாட்டினான்.

"என்னன்னு தெரியலையே...?"

"ஜல்... ஜல்..."

பின்னால் கொலுசுச் சத்தம் கேட்டது.

திரும்பினார்கள்.

செல்லி காப்பிக் கோப்பைகளை ஒரு ட்ரேயில் ஏந்தியபடி நின்றிருந்தாள். கறுப்பு முகத்தில் லேசாய் வியர்வை.

"அய்யா காப்பி..."

"அதை அப்படி வெச்சுட்டு இங்கே வா செல்லி..."

"என்னங்கய்யா...?"

"ஜன்னல் வழியா பாரு. அரைக்கோள சைஸில் வெள்ளையா ஏதோ தெரியுதே அது என்ன...?"

செல்லி பார்த்துவிட்டு குரலில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் சொன்னாள்.

''அது சமாதிங்க...''

மதுலிகா கை நடுங்க - சரவணகுமாரின் கையைப் பற்றிக் கொண்டாள். அவனுடைய கையும் பனிக்கட்டியைப் போல் சில்லிட்டுப் போயிருந்தது.

# 3

''ச... ச... சமாதியா...?'' சரவணகுமாரின் குரல் சிக்கியது.

''ஆமாங்கய்யா...''

''யாரோட சமாதி அது...?''

''பெரியய்யா, பெரியம்மாவோடது... ரெண்டு பேரையும் ஒரே இடத்துல வெச்சுத்தான் அடக்கம் பண்ணியிருக்கு.''

சரவணகுமார் மதுலிகாவை ஏறிட்டான். ''இந்த சமாதி விஷயத்தை ரவிஷங்கர் என்கிட்ட சொல்லவேயில்லை...''

மதுலிகா மிரண்ட பார்வையோடு அந்த சமாதியையே பார்த்துக் கொண்டிருக்க செல்வி தொடர்ந்தாள்.

''பெரியய்யாவும், பெரியம்மாவும் பௌர்ணமியன்னிக்கு செத்ததினால ஒவ்வொரு பௌர்ணமி அன்னிக்கும் சின்னையா ரெண்டு பேரும் படையல் போட்டுக் கும்பிடறது வழக்கம்...''

மதுலிகா ஜன்னலை மூடிவிட்டுத் திரும்பினாள். நெற்றியில் வியர்வை லேசாய் பொடித்திருந்தது.

''செல்வி... காப்பி எடுத்துக் குடு...''

அவள் நகர்ந்து போக - சரவணகுமார் மதுலிகாவின் காதுக்குப் பக்கத்தில் குனிந்து கேட்டான்.



''என்ன பயந்துட்டியா...?''

''பின்னே... கெஸ்ட் ஹவுஸுக்குள்ளேயே சமாதி இருக்கே...?''

''இருந்தா என்ன...?''

''இப்ப எனக்கு இது வீடு மாதிரி தெரியலை... ஏதோ சுடுகாட்டுக்குள்ளே இருக்கிற மாதிரி ஃபீலிங்...''

''சத்தம் போட்டுப் பேசாதே... செல்லி காதுல விழுந்துடப் போவுது. ரவிஷங்கரோட தாத்தா பாட்டி சமாதி தானே...?'' இருந்துட்டுப் போவுது.''

செல்வி காப்பி ட்ரேயோடு பக்கத்தில் வந்தாள். ஒரு கோப்பையை எடுத்து சரவண குமாருக்கு நீட்டிவிட்டு - இன்னொரு கோப்பை எடுத்து மதுலிகாவிடம் நீட்டினாள்.

மதுலிகா அவளை நிமிர்ந்து பார்த்தபடி வாங்க - செல்வி அவளையே உற்றுப் பார்த்தபடி புன்னகைத்தாள்.

கறுப்பு முகம் - மேடிட்ட நெற்றி - துருத்தின பல்வரிசை. இந்தக் கலவையில் முகம் வித்தியாசமாய் புன்னகைத்தது.

மதுலிகாவின் எலும்புக்குள் ஒரு குளிர் ஊடுருவிற்று.

சட்டென்று கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

செல்வி பார்வையை சரவணகுமாரிடம் கொண்டு சென்றாள்.

''அய்யா...''

''ம்...''

''ராத்திரி சமையலுக்கு என்ன பண்ணட்டும்...?''

''நீ எதைப் பண்ணினாலும் சரிதான்...''

''காட்டுக்கோழி புடிச்சு வெச்சிருக்கேன். அடிச்சு குழம்பு வெச்சு சப்பாத்தி செஞ்சிடவா..?''

''ம்... செய்...''

செல்லி நகர்ந்தாள்.

போகிற அவளையே மதுலிகா வெறிக்க - சரவணகுமார் மெல்ல அவளுடைய தோளைத் தட்டினான்.

"என்ன அவளை அப்படிப் பார்க்கிறே...?"

"இவளைப் பார்க்கிறப்பெல்லாம் மனசுக்கு 'திக் திக்'ன்னு இருக்கு. நிச்சயமா இவ சரியில்லீங்க..."

இடது கையை தலையில் வைத்துக் கொண்டு "போச்சுடா மறுபடியும் ஆரம்பிச்சுட்டியா?" என்றபடி நாற்காலிக்கு சாய்ந்தான் சரவணகுமார்.

மதுலிகா பெருமூச்சு விட்டாள்.

"நான் சொல்றதை நம்புங்க... இவ சரியில்லை. இந்த பங்களா சரியில்லை... நாம உடனடியா கிளம்பிப் போயிடறது பெட்டர்ன்னு எம்மனசுக்குப் படுது...?"

"முட்டாள்தனமா உளறாதே! உடனே புறப்பட்டுப் போகவா இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தோம்... காப்பியைக் குடிச்சுட்டுப் போய் குளி. உடம்பும் மனசும் ஃப்ரஷ்ஷாயிரும்... உனக்கு தனியா குளிக்க பயமாயிருந்தா சொல்லு.... நானும் வர்றேன் ரெண்டு பேரும் சேர்ந்து குளிக்கலாம்..."

"எனக்கொண்ணும் பயமில்லை... நானே தனியே குளிச்சுக்குவேன்..." காப்பியைக் குடித்து காலி கோப்பையை வைத்த மதுலிகா பக்கத்து அறைக்கு போய் சூட்கேஸை எடுத்து வந்து பிரித்தாள்.

டெலிபோன் கூப்பிட்டது.

சரவணகுமார் எடுத்தான்.

"யார்ன்னு தெரியலையே...?"

"உங்க ஃப்ரெண்ட் ரவிஷங்கராய்த்தான் இருக்கணும்."



போய் ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ..."

"அய்யா... வணக்கம்ங்க..."

"யாரு...?"

"நான் வாட்ச்மேன் நல்லக்கண்ணு. டவுனிலிருந்து பேசறேன்யா... நீங்க சரவணகுமார் அய்யா தானுங்களே..."

"ஆமா..."

"அய்யா... நீங்க வந்த நேரத்துல நான் இல்லாமே போனதுக்காக மன்னிச்சுடுங்கய்யா... என்னோட நெலமை..."

"இதோ பார் நல்லக்கண்ணு... நீ எழுதுன லெட்டர் கிடைச்சு விபரத்தையெல்லாம் தெரிஞ்சுகிட்டேன்... உன்னோட பொண்டாட்டியைக் கவனி. எங்களை கவனிக்கத்தான் செல்வி இருக்காளே..."

"செல்வி சின்னப் பொண்ணுங்க... கொஞ்சம் துடுக்காப் பேசும். மனசுல எதையும் வெச்சுக்காதீங்கய்யா..."

"அதையெல்லாம் விடு. இப்ப உன் பொண்டாட்டிக்கு எப்படி இருக்கு...?"

"ஆஸ்பத்திரியில் கொண்டாந்து சேர்த்த பின்னாடி - இப்ப பரவாயில்லீங்கய்யா... நாளைக்கு காலையில பெரிய டாக்டர் வந்து பார்த்துட்டு என்ன சொல்றார்ன்னு தெரிஞ்சுகிட்டு பங்களாவுக்கு வர்றேன்யா..."

"அவசரப்பட்டு வராதே... உன் பெண்டாட்டிக்கு குணமானதும் வந்தா போதும்..."

"உங்க நல்ல மனசுக்கு நன்றிய்யா..."

சரவணகுமார் ரிஸீவரை வைத்தான். உள்ளாடைகளையும் சேலையையும் சூட்கேஸிலிருந்து பொறுக்கி தோள் மேல்

போட்டபடி குளியலறையை நோக்கி நகர்ந்த மதுலிகா கேட்டாள்.

''போன்ல யாருங்க... வாட்ச்மேனா...?''

''ஆமா...?''

''என்ன சொல்றான்...?''

''நாளைக்குக் காலையில டாக்டர் என்ன சொல்றார்ன்னு பார்த்து வரப்போறானாம்... நீ போய் குளியலை முடி. நான் டி.வி. பார்த்துட்டிருக்கேன். நீ வந்ததும் நான் போறேன்...''

திறந்திருந்த கதவைத் தள்ளியபடி - மதுலிகா குளியலறைக்குள் நுழைந்தாள். சற்று பெரிய குளியலறை. லேசான இருட்டில் பாத் டப் தெரிந்தது. காற்றில் ஓடர் ரிமூவர் மணத்தது. குளியலறையை வெளிச்சத்துக்குக் கொண்டு வர - ஸ்விட்ச் போர்டைத் தேடினாள்.

கெய்ஸர்க்கு கீழே - அது பெரிய பக்கத்தில் போனாள்.

திடுக்கிட்டாள்.

கெய்ஸர்க்கு அருகில் இருந்த திட்டின் மேல் -

இருட்டின் பின்னணியில் இரண்டு கண்கள் சிவப்பு நிற ரேடியம் மாதிரி ஒளிர்ந்தன.

## 4

''வ்வ்வ்வீல்ல்ல்.''

மதுலிகா வீறிட்டு - கையில் வைத்திருந்த உள்ளாடைகள் சிதற அலறியடித்துக் கொண்டு வெளியே வந்து சோபாவின் மேல் விழுந்தாள்.



டி.வி. சானலை சரி பார்த்துக் கொண்டிருந்த சரவண குமாரும் சமையலறையில் வேலையில் இருந்து செல்லியும் சத்தம் கேட்டு ஓடி வந்தார்கள்.

''மதுலிகா... என்னாச்சு...?''

மதுலிகாவின் நடுங்குகிற உடம்பை மெலிதாய் அணைத்துக் கொண்டான்.

''எ... என்னங்க.. அ.. அந்த... அந்த பாத்ரூம்ல...''

''பாத்ரூம்ல...?''

''ரெ... ரெண்டு க... கண்ணு...''

''கண்ணா...?''

''ஆ... ஆமாங்க... இ... இருட்டுல ரெ... ரெண்டு கண்ணு மட்டும் த... தனியா தெ... தெரியுது...''

''நீ... எதையோ பார்த்துப் பயந்துட்டிருக்கே... நான் உள்ளே போய் பார்த்துட்டு வர்றேன்... இப்படி உட்கார்...''

மதுலிகா - கணவனின் கையைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.

''வேண்டாங்க... நீ... நீங்க... போகாதீங்க...''

செல்லி முன்னால் வந்தாள்.

''நா... போய் பார்க்கிறேன்மா...''

குளியலறைக் கதவை மெல்லத் திறந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள். உடனே சிரித்தாள்.

''டீ... மீனு... நீயா...? ச்சீ... வெளியே வா! இப்படித் தான் இருட்டுல உட்கார்ந்துகிட்டு பயமுறுத்தறதா...?''

''ம்மியாவ்...''

''கழுத... வெளியே வா...''

அந்தக் கறுப்பு நிற பூனை துள்ளலாய் ஓடி வந்து செல்லியின் தோளில் தாவி உட்கார்ந்தது.

செல்லி தன் துருத்தின பல்வரிசையைக் காட்டி - தன் பெரிய ஈறுகள் தெரியச் சிரித்தாள்.

"இதப்... பார்த்தாம்மா பயந்துட்டீங்க...? இது மீனும்மா. இந்த வீட்லயே வளர்க்கிற பூனை. ரெண்டு நாள் பழகினா போதும். உங்க மடியிலேயே ஏறி உட்கார்ந்துக்கும்..."

இன்னமும் 'லபக் லபக்'கென்று துடித்துக் கொண்டிருக்கிற இருதயத்தோடு செல்லியின் தோளில் தொற்றியிருந்த அந்தப் பூனையைப் பார்த்தாள் மதுலிகா. அது தன் சிரிப்புக் கண்களால் மதுலிகாவையே வெறித்தது.

"போய் குளிங்கம்மா..."

பூனையோடு நகர்ந்தாள் செல்லி.

அறையைக் கடக்கும்போது - ஒரு முறை மதுலிகாவைத் திரும்பிப் பார்த்து துருத்தின பற்களோடு புன்னகைத்தாள்.

இருதயத்துக்குள் ஒரு குளிர் பாய்ந்தது.

## 5

**ரா**த்திரி மணி பத்தரை.

அந்தக் காட்டுப் பகுதி அசாத்தியமான நிசப்தத்தில் உறைந்து போயிருக்க - கழுத்து வரைக்கும் போர்வையைப் போர்த்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்திருந்தார்கள் சரவண குமாரும் மதுலிகாவும். அறையில் நீலநிற ஜீரோ வாட்ஸ் வெளிச்சம்.



மதுலிகாவை ஒரு பயம் தடவியிருக்க - அவள் வலது கையால் சரவணகுமாரின் இடுப்பை இறுக்கிப் பிடித்திருந்தாள்.

சுவர்க்கடிகாரம் மட்டும் பங்களாவில் பரவியிருந்த நிசப்தத்தை கலைத்து விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்ட மாதிரி ஒரு பல்லியை போல் 'உர்' கொட்டி விநாடி முள்ளை நகர்த்திக் கொண்டிருந்தது.

"என்னங்க..."

"ம்..."

"இன்னிக்கு ராத்திரி எனக்குத் தூக்கம் வராது போலிருக்கு."

"எதுக்கு தூங்கணும்...? நாம வந்திருக்கிறதே நம்ம ஹனிமூனைக் கொண்டாடத்தானே...?"

"எனக்கு இப்ப அந்த மூடே இல்லை..."

"பூனையைப் பார்த்த பயம் இன்னும் போகலையா?"

"எப்படிப் போகும்...? நினைச்சாலே 'திக் திக்'ன்னு இருக்கு..."

"நீ அநாவசியத்துக்கு பயப்படறே மதுலிகா."

"அந்த செல்லி காலையில எத்தனை மணிக்கு வருவாளாம்?"

"ஆறு மணிக்கு வர்றதா சொன்னா... நான் தான் அவ்வளவு காலையில வரவேண்டாம். ஏழு மணிக்கு வந்தா போதும்னு சொல்லி அனுப்பிட்டேன்..."

"அவளும் அவளோட மூஞ்சியும்..."

"எல்லாரும் உன்னை மாதிரியே அழகா இருப்பாங்களா என்ன?" கேட்டுக் கொண்டே அவளுடைய இடுப்பைக் கிள்ளினான், சரவணகுமார்.

''வேண்டாங்க... எனக்கு ரொமான்ஸ் மூடு இல்லை.''

''மூடை வரவழைக்க நானாச்சு...''

''உங்க கையையும் காலையும் வெச்சுகிட்டு கொஞ்சம் சும்மா இருங்க... எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கலாம்.''

''ஒரு நைட் வேஸ்ட்...''

பேச்சை மாற்றினாள் மதுலிகா.

''உங்க ஃப்ரண்ட் ரவிஷங்கர் உங்களுக்கு போன் பண்ணவே யில்லை பார்த்தீங்களா...?''

''க்ளப்பிலிருந்து வந்திருக்க மாட்டான்...''

''அவரோட ப்ரதர் க்ருபாஷங்கர்க்கு போன் பண்ணி கேட்டுப் பாருங்களேன்...''

போர்வையினின்றும் உருவிக் கொண்டு வெளியே வந்தான். சரவண குமார். ஜீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் மெதுவாய் நடந்து டெலிபோனை நெருங்கி - ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

டயல் டோன் கேட்கவில்லை.

பட்டனைத் தட்டினான். 'பட்... பட்... பட்...'

'ஊ... ஹூம்...'

டெலிபோன் இறந்து போயிருந்தது.

மதுலிகா முகத்தைத் திருப்பிக் கேட்டாள்.

''என்னங்க...''

''போன் ஒர்க் பண்ணலை...''

''கொஞ்ச நேரத்துக்கு முந்தி நல்லாயிருந்ததே...?''

''அவுட் ஆப் ஆர்டர்ன்னு நினைக்கிறேன்.''



மதுலிகா எழுந்து வந்து - கணவனின் கையிலிருந்த ரிஸீவரை வாங்கி தன் காதுக்குக் கொடுத்தாள்.

ரிஸீவரில் -

ஆழ் கடல் நிசப்தம்.

கணவனைக் குழப்பமாய் பார்த்தாள்.

''எப்படீங்க இது...?''

''என்னைக் கேட்டா...?''

''யாராவது கட் பண்ணியிருப்பாங்களா?''

அவளுடைய தலையில் மெல்லத் தட்டினான் சரவண குமார். ''அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்ன்னு சொல்வாங்க... ஏற்கனவே பயந்து போயிருக்கிற உனக்கு அப்படித்தான் தோணும். வந்து படு...''

மதுலிகாவை கட்டிலுக்குத் தள்ளிக் கொண்டு போனான்.

## 6

தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்த மதுலிகாவுக்கு சட்டென்று விழிப்புத் தட்டியது. சரவணகுமார் சன்னமான குறட்டையில் இருந்தான். அறை முழுக்க நீலச்சாயம் கொட்டின சைஸில் ஜீரோ வாட்ஸ் வெளிச்சம்.

''க்ர்ர்ர்க்க்... க்ர்ர்ர்க்க்...''

ஜன்னலுக்கு வெளியே பூச்சிகள் நிசப்தத்தை அறுத்துக் கொண்டிருக்க, மதுலிகா திரும்பிப் படுத்து முதுகை அணைத்துக் கொண்டாள்.

'நேரம் எவ்வளவு இருக்கும்?'

மெல்ல தலையை உயர்த்தி சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள்.

மணி 12.35.

போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு - கண்களை இறுக மூடித் தூங்க முயன்றாள். சற்று நேரத்திற்கு முன்னால் கலைந்த தூக்கம் காத தூரத்திற்கு ஓடிப் போயிற்று.

சமாதி ஞாபகம் வந்தது.

செல்வி ஈறுகள் தெரிய - துருத்தின பல்வரிசையோடு சிரித்தாள். கறுப்புப் பூனையின் கண்கள் அவளையே வெறித்தது.

பயத்தில் தொண்டை வறண்டது.

ஒரு வாய் தண்ணீர் உள்ளே போயாக வேண்டும் என்கிற அவஸ்தை எழ - மெதுவாய் எழுந்து உட்கார்ந்தாள்.

அதே விநாடி -

அந்தச் சத்தம் கேட்டது.

அறைக்கு வெளியே -

ஹாலில் -

காலடிச் சத்தம்.

மதுலிகாவுக்கு குப்பென்று வியர்த்தது.

கணவனை அவசர அவசரமாய் உசுப்பினாள்.

''எ... என்னங்க...''

சரவணகுமார் தூக்கம் கலைந்து திடும்மென்று விழித்தான்.

''என்ன... மது...?''

அவள் கிசுகிசுத்தாள்.

''ஹால்ல யாரோ... நடக்கிற சத்தம் கேட்குது...''



''நடக்கிற சத்தமா...?''

''ஆமா...''

சரவணகுமார் எழுந்து உட்கார்ந்தான். காதுகளுக்கு உள்ளிப்பைக் கொடுத்தான்.

நிசப்தம்.

சுவர்க்கடிகாரத்தின் பெண்டுலச் சத்தமும், பூச்சிகளின் 'க்ர்ர்ர்க் க்ர்ர்ர்க்' சத்தத்தையும் தவிர வேறு எந்தவித சத்தமும் இல்லை.

ஒரு நிமிஷம்....

இரண்டு நிமிஷம்...

மூன்றாவது நிமிஷம் மதுலிகாவின் முகத்தை கோபமாய் ஏறிட்டான்.

''எந்த சத்தத்தையும் காணோம்.''

''எனக்குக் கேட்டுச்சுங்க...''

''ஏதாச்சும் கனவு கண்டியா...?''

''இல்லீங்க... சத்தியமா... யாரோ நடக்கிற மாதிரி சத்தம் கேட்டது.''

''இதோ பார் மதுலிகா...! இங்க வந்ததிலிருந்தே நீ நீயாக இல்லை... கண்டதை நினைச்சு அரண்டு போயிருக்கே... நீ என்ன சின்னப் பொண்ணா? எதுக்காக இப்படிப் பயப்படறே...?''

''நி... நிஜமாத்தாங்க...''

''பேசாம படு... உன்னோட இதே ரோதனையா...''

சரவணகுமாரின் பேச்சு சட்டென்று நின்றது. முகம் மாறியது இப்போது - அறைக்கு வெளியே -

ஹாலில் - அந்தக் காலடிச் சத்தம் கேட்டது.

யாரோ மெதுவாய் நடை போடும் சத்தம்.

செருப்பு அணிந்து நடக்கிறார்கள்.

"ச்ச்ரக்... ச்ச்ரக்..."

மதுலிகா விழிகள் விரிய கிசுகிசுத்தாள்.

"பாத்தீங்களா... பாத்தீங்களா...?"

சரவணகுமார் அந்த சத்தத்தை உன்னித்தான்.

ஊர்ஜிதமாயிற்று.

"நிச்சயமாய் ஹாலில் யாரோ இருக்காங்க மது..."

"எப்படிங்க பூட்டின வீட்டுக்குள்ளே..."

கட்டிலைவிட்டு இறங்கினான்.

"எங்கே போறீங்க...?"

மதுலிகா அவனுடைய தோளைப் பற்றினாள்.

"வேண்டாங்க... யாரோ இருந்துட்டுப் போகட்டும்..."

"என்ன மது புரியாம பேசறே...? வீட்டுக்குள்ளே வந்திருக்கிறது யார்ன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா...? ரூமுக்குள்ளேயே உட்கார்ந்திட்டிருந்தா என்ன அர்த்தம்?"

"எ... எனக்கு பயம்மாயிருக்குங்க..."

"நீ வேணும்ன்னா இந்த ரூம்ல இரு. நான் போய் பார்த்துட்டு வர்றேன்..."

"அய்யோ... நான் தனியா இருக்க மாட்டேன்."

"அப்படின்னா நீயும் என் கூட வா..."

மெல்ல கட்டிலினின்றும் இறங்கிய அவன் அறைக் கதவை நெருங்கினான். அவனைப் பின் தொடர்ந்த மதுலிகா கிசுகிசுத்தாள்.

"சாவி துவாரத்துல கண்ணை வெச்சு ஹாலைப் பாருங்க."



சரவணகுமார் மண்டியிட்டு உட்கார்ந்து - சாவி துவாரத்தில் கண்ணைப் பொருத்தினான்.

ஹால் பார்வைக்குக் கிடைத்தது.

அரையிருட்டு.

சோபாக்களும், மாடிப்படிகளும் பென்சிலால் வரைந்த மாதிரி தெரிந்தது. காற்றில் ஜன்னல் திரைச் சீலைகள் வேகமாய் அசைந்து கொண்டிருந்தது.

"ஹால்ல யாரும் இருக்கிற மாதிரித் தெரியலையே...?"

"நாம எழுந்து வந்த சத்தத்தைக் கேட்டு ஆள் ஒளிஞ்சிருக்கலாம்..."

"யார்ன்னு பார்த்துடலாம்" சொன்ன சரவணகுமார் சாவி துவாரத்தினின்று எழுந்து - கதவின் தாழ்ப்பாளை விலக்கினான்.

"ப்ளக்."

தாழ்ப்பாள் விலகியதும் - கதவை மெல்லத் திறந்து தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்தான்.

ஹாலில் எந்தச் சலனமும் இல்லை. மெல்ல குரல் கொடுத்தான். "யாரது...?"

மௌனம்.

ஹாலுக்குள் காலடி எடுத்து வைத்தான். மதுலிகா அவனுடைய தோளைப் பற்றிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தபடி தொடர்ந்தாள்.

ஹாலில் யாரும் தட்டுப்படவில்லை.

சரவணகுமார் ஹால் சுவரோரமாய் நடந்து வந்து ஸ்விட்ச் போர்டில் இருந்த ஸ்விட்ச் பட்டன்களைத் தட்டினான்.

ஹாலின் மேற்கூரையில் ஒளிந்திருந்த - இரண்டு ட்யூப் லைட்டுகளும், ஒரு ஸாண்ட்லியர் விளக்கும் வெளிச்சத்திற்கு வந்தது.

சரவணகுமார் வெளிப்பக்க வாசல் கதவுக்குப் போய் பார்க்க அது தாழிடப்பட்டிருந்தது.

''உள்ளே வந்தவங்க யாராயிருந்தாலும் வெளியே போயிருக்க வாய்ப்பில்லை... மது...''

''நாம எழுந்து வந்த சத்தத்தைக் கேட்டுட்டு ஹால்ல இருந்தவன் மாடிக்குப் போயிருந்தா...?''

''மாடிக்குப் போய் பார்த்துடலாமா...?''

''வேண்டாங்க... நாம ரூமுக்குப் போயிடுவோம்...''

மதுலிகா சொல்லிக் கொண்டிருக்கும்போதே...

எரிந்து கொண்டிருந்த விளக்குகள் 'கப்'பென்று அணைய - கண்ணைக் கட்டிய மாதிரி இருட்டு.

''எ... என்னங்க...'' கணவனின் தோளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

''மது... பயப்படாதே... கட்டில் தலை மாட்டில் ஒரு பெரிய டார்ச் இருந்தது. அதை எடுத்துட்டு வந்துடலாம். வா...''

''வ... வழி... எந்தப் பக்கம்னு தெரியலையே...?''

''என்னைப் பிடிச்சுகிட்டே வா...''

மெல்ல நகர்ந்தார்கள்.

சிறிது தூரம் நடந்ததுமே - சுவர் தட்டுப்பட்டது. அதைப் பிடித்துக் கொண்டு தட்டுத் தடுமாறி அறைக்குள் நுழைந்தார்கள்.

சரவணகுமார் கட்டிலின் காலில் - தன் கால் முட்டியை இடித்துக் கொண்டு - படுக்கையில் கவிழ்ந்து - தலைமாட்டில் தலையணைக்குப் பக்கத்தில் இருந்த அந்த டார்ச்சை எடுத்துக் கொண்டான்.

டார்ச் பட்டனைத் தட்டிய விநாடி -



மரத்தாலான - ஹால் மாடிப்படிகளில் - யாரோ இறங்குவது போலவோ ஏறுவது போலவோ அந்தக் காலடிச் சத்தம் எழுந்தது.

# 7

டார்ச் வெளிச்ச வட்டத்தை உமிழ்ந்தது.

சரவணகுமாரின் முகம் வியர்த்து வழிந்து கொண்டிருக்க - அந்தக் காலடிச் சத்தம் ஸ்பஷ்டமாய் கேட்டுக் கொண்டிருந்தது.

''மது...''

''ம்...''

''இப்ப வெளியே போனா ஆளை மடக்கிடலாம்.''

''இந்த இருட்டுல எப்படிங்க...? வந்திருக்கிற ஆள் கையில ஏதாவது ஆயுதம் வெச்சிருந்தா...?''

''துணிஞ்சு போக வேண்டியதுதான்...'' சொன்ன சரவணகுமார் டார்ச்லைட் வெளிச்சத்தோடு வெளிப்பட்டான். அவனுடைய தோள்களுக்குப் பின்னால் மதுலிகா ஒண்டிக் கொண்டு தொடர்ந்தாள்.

டார்ச்சின் வெளிச்சவட்டம் அங்கும் இங்குமாய் விழுந்து இருட்டைத் துடைத்து - பொருள்களைக் காட்டி - பின் மாடிப் படிகளுக்குப் போயிற்று.

ஒவ்வொரு படியாய் த்த்தியது.

யாரும் தட்டுப்படவில்லை.

டார்ச் வெளிச்சம் உச்சிப்படியைத் தொட்டு விட்டு கீழே இறங்கியது. மதுலிகாவின் உடம்பு தன்னிச்சையாய் நடுங்கிக் கொண்டிருந்தது.

"மது..."

"ம்..."

"மாடியோட இடது கைப்பிடிக்குப் பக்கத்துல - பித்தளை ஃப்ளவர் வாஷ் இருக்கு தெரியுதா...?"

"தெ... தெரியுது..."

"அதைக் கையில் எடுத்துக்க..."

"எ... எதுக்கு...?"

"எடுத்துக்கச் சொல்றேன்."

மதுலிகா இருட்டில் நகர்ந்து போய் - அந்தக் கனமான பித்தள ஃப்ளவர்வாஷை எடுத்துக் கொண்டாள்.

"என் பின்னாடியே வா..."

"எ... எங்கே போ... போறீங்க?"

"மாடிக்கு...?"

"மா... மாடிக்கா...?"

"பயப்படாமே வா.., ஆள் எதிர்ப்பட்டதும் ஃப்ளவர் வாஷை என்கிட்ட குடுத்துடு. நான் பார்த்துக்கறேன்."

மதுலிகாவின் வியர்வை முகம் திகிலாய் அசைந்தது.

"என் கூடவே வா..."

சரவணகுமார் சொல்லிக் கொண்டே - மாடிப் படிகளின் முதல் படியின் மேல் காலை வைத்தான்.

அந்த சத்தம் படிகளின் உச்சியில் கேட்டது.

"டடக்..."

இருவரும் நிமிர்ந்தார்கள்.

"என்ன சத்தம் அது...?"



"டடக்... டடக்... டடக்..."

மதுலிகா கணவனின் முதுகுக்குப் பின்னால் இருந்து குரல் நடுங்கினாள். "ஏதோ உருண்டுட்டு வர்ற மாதிரி இருக்குங்க..."

டார்ச்சின் வெளிச்ச வட்டம் மேலே போயிற்று. வெளிச்சம் தத்திய போது - பார்வைக்கு அது தட்டுப் பட்டது.

தலைமுடியோடு...

உருண்டையாய்...

'என்ன அது...?'

ஒவ்வொரு படியாய் அது உருண்டது.

"டடக்... டடக்..."

சரவணகுமார் டார்ச் வெளிச்சத்தோடு மேலே போக முயல மதுலிகா அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"வேண்டாங்க... அது என்னன்னு தெரியாம பக்கத்துல போகாதீங்க..."

"டடக்... டடக்..."

அது உருண்டது.

டார்ச்சின் வெளிச்ச வட்டத்தை - பதட்டமாக அதன் மேல் கொட்டினான் சரவணகுமார்.

அது இப்போது பார்வைக்குப் பிடிபட்டது.

வெட்டப்பட்ட மனிதத் தலை.

"க்ர்ர்ர்ரீச்ச்ச்..."

மதுலிகா அலறி - பின் வாங்க - சரவணகுமார் அதிர்ச்சியை சுதாரித்துக் கொண்டு - கை நடுங்க டார்ச்சோடு முன்னால் போனான்.

''டடக்...''

வெட்டப்பட்ட தலை கடைசிப் படியில் வந்து விழுந்து ஒருக்களித்து சாய்ந்தது.

சரவண குமார் குனிந்தான்.

டார்ச் வெளிச்சத்தை அதன் மேல் கவிழ்த்தான்.

கிட்டித்துப் போன பல் வரிசையோடு தெரிந்த அது...

ரவிஷங்கரின் தலை.

கழுத்துப் பகுதியில் உறைந்து போன ரத்தம்.

## 8

ரவிஷங்கரின் வெட்டுண்ட தலையைப் பார்த்து அதிர்ச்சிக்குள் விழுந்திருந்தார்கள், சரவணகுமாரும் மதுலிகாவும்.

மதுலிகா வாய் குழறினாள்.

''எ... என்னங்க... எ... எப்படிங்க... இது...? எ.. எனக்கு மயக்கம் வர்ற மாதிரி இருக்குங்க...''

''மது...! சீக்கிரமா... நாம அந்த இடத்தை விட்டுக் கிளம்பணும்... வா...''

அவளை இழுத்துக் கொண்டு வாசலை நோக்கி டார்ச் வெளிச்சத்தின் உதவியில் ஓடினான்.

வாசல் கதவு வந்தது.

தாழ்ப்பாளை பறிக்கிற மாதிரி திறந்து கொண்டு போர்டிகோவுக்கு வந்தார்கள்.



வெளியே -

கறுப்பு பெயிண்டாய் இருட்டு. சில் வண்டுகள் ரீரீரீரீ என்ற ரீங்காரிப்பில் இருக்க - உடம்பில் - உடனே குளிர் உறைத்தது.

போர்டிகோவில் நின்றிருந்த ஆர்மென்டோ ஜீப்புக்குள் இருவரும் தாவி ஏறினார்கள்.

சரவணகுமார் இக்னீஷியனை சிணுங்க வைத்தான். என்ஜின் கமறி புகை கக்கியதும் விர்ரென்று நகர்த்தினான்.

காம்பௌண்ட் கேட் சாத்தியிருந்தது.

''மது... இறங்கிப் போய் திற...''

மதுலிகா நடுக்கமாய் கீழே இறங்கினாள். வேக நடை போட்டு காம்பௌண்ட் கேட்டின் உள் லாக்கை விடுவித்து - கேட்டை விரியத் திறந்தாள்.

ஜீப்புக்கு மறுபடியும் திரும்பப் போய் -

மதுலிகாவின் பார்வை எதேச்சையாய் சமாதிப் பக்கம் போக - இருதயம் சீவிரென்றது.

சமாதியின் மேல் யாரோ -

சம்மணமிட்டு உட்கார்ந்திருந்ததைப் போன்ற தோற்றம்.

'நிஜமா... பிரமையா...?'

நின்று நிதானமாய் பார்க்க - பயமாய் இருந்தது. ஓடி வந்து ஜீப்புக்குள் ஏறிக் கொண்டாள்.

## 9

ஜீப்பை அசுர வேகத்தில் விரட்டினான் சரவண குமார்.

ஹெட்லைட் வெளிச்சம் - காட்டுப் பாதையில் உட்கார்ந் திருந்த இருட்டை விரட்டியது. மரங்கள் ஓடிவந்து விலகியது.

''மது... நிஜமா... நீ பார்த்தியா...?''

''ஆமாங்க... பார்த்தேன்... அந்த சமாதி மேல சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தாங்க...''

''அந்த பங்களாவில என்னமோ தப்பு இருக்கு...''

''உங்களுக்கு இப்பத்தான் தெரியுது... நான் அந்த பங்களா வுக்கு போய்ச் சேர்ந்த நிமிஷத்திலிருந்து சொல்றேன்...''

''நடந்திருக்கிற சமாச்சாரம் பூராவுமே வயத்தைக் கலக்கற மாதிரி இருக்கு...''

''இப்ப... என்னங்க... பண்றது...?''

''போலீஸ் ஸ்டேஷன்ல போய் சொல்ல வேண்டியது தான்...''

''போலீஸா...?''

''ஏன் பயப்படறே...? நடந்திருக்கிறது சாதாரண சம்பவம் இல்லை. நாம் அந்த பங்களாவில் இருந்திருக்கும் போது - சம்பவம் நடந்திருக்கு. கொலை செய்யப்பட்டிருக்கிறது ரவிஷங்கர் விஷயத்தை நாம மறைக்கவே முடியாது.''

அரை மணி நேர பயணத்தில் - சிறுவாணி காட்டுப் பகுதி முடிந்து - சுமாரான தார்ச் சாலையோடு பூண்டி மலை அடி வாரம் வந்தது.

மதுலிகா கேட்டாள்.

''போலீஸ் ஸ்டேஷனுக்கு எவ்வளவு தூரம் போகணும்?''

''பக்கத்துலதான் செம்மேடுன்னு ஒரு கிராமம். அங்கே போலீஸ் ஸ்டேஷன் இருக்கு...''

''போலீஸ்ல நாம சொல்றதை நம்புவாங்களா...?''



''நாம பொய் சொல்லப் போறதில்லையே... நடந்ததைச் சொல்லப் போறோம் அவ்வளவுதான்...''

அடுத்து வந்த நிமிஷப் பயணத்திற்குள் -

செம்மேடு கிராமம் வந்தது. மோனத்தில் இருந்தது. சாலையின் மையத்தில் படுத்திருந்த மாடுகள் ஜீப்பின் வெளிச்சத்திலும் - இரைச்சலிலும் - அரக்க பரக்க எழுந்து வழி விட்டன.

போலீஸ் ஸ்டேஷன் கிராமத்தின் மையத்திலேயே கிடைத்தது. குட்டையான காம்பௌண்ட் சுவர்க்கு நடுவில் சிவப்பு, வெள்ளை பெயிண்ட் அடிக்கப்பட்ட அந்த வீடு போலீஸ் ஸ்டேஷனாய் மாறியிருந்தது.

ஜீப்பை நிறுத்திவிட்டு கீழே இறங்கினான் சரவண குமார். மதுலிகா கலைந்த தலையும் - வியர்வை முகமுமாய் தொடர்ந்து இறங்கினாள். ஸ்டேஷன் ட்யூப் லைட் வெளிச் சத்தில் இருந்தது. முன்பக்க வராந்தாவில் பேப்பரும் கையு மாய் உட்கார்ந்திருந்த அந்த மஃப்டி போலீஸ் கான்ஸ்டபிள் நிமிர்ந்தார்.

''யாரைப் பார்க்கணும் ஸார்...?''

''எஸ்.ஐ. இருக்காரா...?''

''உள் ரூம்ல படுத்து தூங்கிட்டிருக்கார் ஸார்... அவர்க்கு ட்யூட்டி பத்து மணிக்கே முடிந்தது. டவுனுக்கு பஸ் கிடைக் காததினால... ஸ்டேஷனிலேயே படுத்து விட்டார்.''

''ப்ளீஸ்... அவரை எழுப்புங்க...''

''யாரு...?''

உள்ளறையிலிருந்து குரல் கொடுத்துக் கொண்டே வேஷ்டியும் பனியனும் அணிந்த அந்த நடுத்தர வயது நபர் வெளிப்பட்டார். கண்களில் தூக்கக் கலக்கம்.

கான்ஸ்டபிள் சொன்னார்.

"இவர்தான் ஸார்... எஸ்.ஐ..."

சரவணகுமார் அவரை நெருங்கினான். "ஸார்! நாங்க சிறுவாணி ஃபாரஸ்ட் திவான் ரத்னசபாபதி கெஸ்ட் ஹவுஸ் பங்களாவிலிருந்து வர்றோம். அங்கே ஒரு அசம்பாவிதம் நடந்துடுச்சு..."

"உள்ளே வாங்க... பேசுவோம்..."

ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்கள். உள்ளே யாருமில்லை. லாக்கப் காலியாய் இருந்தது. நாற்காலிகளை காட்டிவிட்டு எதிரில் இருந்த நாற்காலிக்கு உடம்பைக் கொடுத்தார் சப் - இன்ஸ்பெக்டர்.

"ம்... சொல்லுங்க..."

இரண்டு நிமிஷம் செலவழித்து - சரவணகுமார் விஷயத்தைச் சொன்னதும் - அவர் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"வெட்டப்பட்ட தலை ரவிஷங்கரோடதா...?"

"ஆமா... ஸார்..."

"உள்ளே இருந்தது யார்ன்னு தெரியலையா?"

"தெரியலை...?"

"பங்களாவைப் பூட்டிட்டு வந்தீங்களா...? பூட்டாமே வந்தீங்களா?

"பயத்துல போட்டதைப் போட்டபடி ஓடி வந்துட்டோம்."

எஸ்.ஐ. எழுந்தார். வெளிப் பக்கம் எட்டிப் பார்த்து குரல் கொடுத்தார். "ட்டூ நாட் ஃபைவ்..."

"ஸார்..."

கான்ஸ்டபிளின் தலை தெரிந்தது.



"ரைட்டரை எழுப்பி - ஸ்டேஷனைப் பார்த்துக்கச் சொல்லு. நீயும் நானும் இவங்க கூட ஜீப்ல சிறுவாணி ஃபாரஸ்ட் போறோம்."

"எஸ்... ஸார்..."

சப்-இன்ஸ்பெக்டர் பக்கத்து அறைக்குள் நுழைந்து - பரபரவென்று யூனிஃபார்ம் தரித்து வெளிப்பட்டார். சட்டை பாக்கெட் அருகே - குத்தப்பட்டிருந்த நேம் கார்ட் அவருடைய பெயரை விக்னேஷ்வரன் என்று சொன்னது.

## 10

ஜீப் மறுபடியும் சிறுவாணி ஃபாரஸ்ட்டை நோக்கி வேகம் பிடித்தது. ட்ரைவிங் சீட்டில் சரவணகுமாரும் அவனுக்குப் பக்கத்தில் மதுலிகாவும் - பின் சீட்டில் சப்-இன்ஸ்பெக்டர் விக்னேஷ்வரனும் கான்ஸ்டபிளும் உட்கார்ந்திருந்தார்கள்.

விக்னேஷ்வரன் கேட்டார்.

"உங்க பேர் என்ன சொன்னீங்க...?"

"சரவணகுமார்..."

"வேலை பார்க்கறீங்களா...?"

"ஆமா தி டீப் மார்க் ட்ராக்டர்ஸ் கம்பெனியில் டெக்னீஷியனா இருக்கேன்..."

"கம்பெனி எங்கே இருக்கு...?"

"பெரம்பூர் பாரக்ஸ் ரோட்ல... அது ஒரு ஃபாரின் கொலாப்ரேஷன் கம்பெனி..."

''உங்களுக்கு கல்யாணம் எப்ப நடந்தது...?''

''போன வாரம்...''

''ஹனி மூன் போக எவ்வளவோ இடம் இருக்கும்போது காட்டுல இருக்கிற கெஸ்ட் ஹவுஸுக்கு எதுக்காக வரணும்...?''

''என் ஃப்ரெண்ட் ரவிஷங்கர் விடவில்லை. அவன் தான் இந்த வீட்டுக்கு எங்களை வற்புறுத்தி அனுப்பி வைச்சான்... கெஸ்ட் ஹவுஸைப் பத்தி 'ஆஹா ஓஹோ'ன்னு புகழ்ந்தான். அவன் சொன்னதை நம்பி நானும் என் ஒய்ஃப்பைக் கூட்டிகிட்டு வந்துட்டேன்.''

மதுலிகா குறுக்கிட்டு சொன்னாள். ''எஸ்.ஐ... ஸார்! அந்த கெஸ்ட் ஹவுஸுக்குள்ளே நுழைஞ்ச நிமிஷத்திலிருந்தே எனக்குப் பிடிக்கலை. ஒரு மாதிரியான அமானுஷ்யத் தனம் அந்த பங்களாவில இருந்தது ஸார். கெஸ்ட் ஹவுஸுக்குள்ளே ஒரு சமாதி வேற...!''

''சமாதியா...?''

''ம்... ரவிஷங்கரோட தாத்தா பாட்டியோடதாம். அந்த பங்களாவில எதுவுமே சரியில்லை ஸார்...''

''வாட்ச் மேன் பேர் என்ன சொன்னீங்க செல்லக் கண்ணுவா...?''

''இல்லை ஸார்... நல்லக்கண்ணு...''

''அவன் தன் பொண்டாட்டியைக் கூட்டிக்கிட்டு டவுன்ல எந்த ஹாஸ்பிடலுக்குப் போனான்னு தெரியுமா?''

''தெரியாது ஸார்... அவன் எனக்கு போன் பண்ணி பேசினப்ப எந்த ஹாஸ்பிடல்ன்னு கேட்க மறந்துட்டேன்...''

''அந்த வேலைக்காரப் பொண்ணு பேரு செல்வி இல்லையா?''

''ஆமா ஸார்...''



''அவ கெஸ்ட் ஹவுஸை விட்டு எத்தனை மணிக்கு வெளியே போனா...?''

''பத்து மணிக்கு.''

''அவளுக்கு வீடு...?''

''கெஸ்ட் ஹவுஸுக்குப் பக்கத்துல எங்கேயோ இருக்குன்னு சொன்னா.''

''பங்களாவுக்குள்ளே காலடிச் சத்தம் கேட்டதா சொன்னீங்களே? அந்த சத்தம் எப்படியிருந்தது?''

''யூ... மீன்...?''

''வெறும் காலடிச் சத்தமா...? இல்லை செருப்பு ஷூ போட்டுகிட்டு நடக்கிற மாதிரியான சத்தமா...?''

''எதையும் அனுமானிக்க முடியலை ஸார்! ஆனா செருப்பு போட்டுட்டு நடக்கிற மாதிரிதான் சத்தம் கேட்டது.''

''டெலிபோன் எத்தனை மணியிலிருந்து வேலை செய்யலை?''

''பத்தரை மணியிலிருந்து.''

''ஒயரை யாராவது டிஸ்கனெக்ட் பண்ணியிருக்காங்களான்னு செக் பண்ணிப் பார்த்தீங்களா?''

''இல்லை...''

''கரண்ட் எப்படிப் பெய்லியராச்சு...?''

''தெரியலை...?''

''மெயின் ஸ்விட்ச்சை செக் பண்ணீங்களா?''

''இல்லை...?''

''ஏன்...?''

''பயத்திலேயும் பதட்டத்திலேயும் எதுவும் தோணலை ஸார். ரவிஷங்கரோட வெட்டப்பட்ட தலையைப் பார்த்ததும் நானும் என் மனைவியும் அதிர்ச்சியாயிட்டோம். அந்த பங்களாவை விட்டு உடனடியா வெளியேறிடணும்கிற உந்துதலில் ஜீப்பை எடுத்துக்கிட்டு வந்துட்டோம்.''

''அப்படின்னா... பங்களாவுக்குள்ளே நீங்க யாரையும் பார்க்கலை...?''

மதுலிகா குறுக்கிட்டாள்: ''பங்களாவை விட்டு வெளியேறும்போது காம்பௌண்ட் கேட்டை திறக்கப் போன நான் சமாதி மேல யாரோ உட்கார்ந்திட்டிருக்கிறதைப் பார்த்தேன் ஸார்...''

''சமாதி மேல உட்கார்ந்திட்டிருந்தாங்களா...?''

''ஆமா... ஸார்...''

''உருவம் ஆணா... பெண்ணா...?''

''தெரியலை... நான் பார்த்தது ஒரு ப்ராக்ஷன் ஆஃப் செக்கண்ட்தான்... திரும்பிப் பார்க்க பயமா இருந்தது. ஓடி வந்து ஜீப்ல ஏறிவிட்டேன்.''

''ரவிஷங்கரோட ஃபேமிலியில் இப்ப யார் யார் இருக்காங்க...?''

''ரவிஷங்கரோட ப்ரதர் க்ருபாஷங்கர் ஃபாதர் ரத்ன சபாபதி ரெண்டு பேர் மட்டும் தான்...''

''ரவிஷங்கர்க்கு கல்யாணம்...?''

''இன்னும் இல்லை. அவர்க்கு மட்டுமில்லை. க்ருபா ஷங்கர்க்கு கூட கல்யாணம் ஆகலை...''

''ஏன்...?''



''நான் ரவிஷங்கர்கிட்ட காரணம் கேட்டப்ப... அவங்க ஃபேமிலி அந்தஸ்துக்கு ஏற்ற மாதிரி பெண் கிடைக்கலைன்னு சொன்னான்...''

''ரவிஷங்கர்க்கு மதர்...?''

''அவங்க இல்லை... இறந்துட்டாங்க...''

ஜீப் சில நிமிஷங்கள் மௌனமாய் ஓடிய பின் விக்னேஷ் வரன் மறுபடியும் வாயைத் திறந்தார்.

''மிஸ்டர் சரவணகுமார் உங்களுக்கும் ரவிஷங்கர்க்கும் எத்தனை வருஷ பழக்கம்...?''

''காலேஜ் டேஸ்லிருந்தே பழக்கம்...''

''கெஸ்ட் ஹவுஸ் பங்களாவிலிருந்து க்ருபா ஷங்கர்க்கு நீங்க போன் பண்ணி பேசும்போது - ரவிஷங்கர் க்ளப்புக்கு போயிருக்கிறதாய் அவர் சொன்னார் இல்லையா...?''

''ஆமா...?''

''அது எந்த க்ளப்...?''

''தெரியலை...?''

''உட்பக்கமா தாழ் போட்ட கெஸ்ட் ஹவுஸ் பங்களா வுக்குள்ளே ரவிஷங்கர் எப்படி வந்தார்...?'' எதுக்காக வந் தார்...? அப்படி வந்தவரை யார் கொலை செய்து தலையை மாடிப்படிகளில் உருட்டி விட்டது...?''

சரவணகுமார் பெருமூச்சு விட்டான்.

''நமக்கு முன்னாடி இருக்கிற பெரிய குழப்பமே இதுதான் ஸார்.''

ஜீப் ஃபாரஸ்ட் எல்லைக்குள் நுழைந்தது. சில நிமிஷ பயணத்திற்குப் பின் கெஸ்ட் ஹவுஸின் காம்பௌண்ட் கேட்டுக்கு முன்பாய் நின்றது.

கேட் திறந்தபடியே இருக்க - ஜீப் உள்ளே நுழைந்து போர்டிகோவில் தன் இயக்கத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தது.

இறங்கினார்கள்.

வாசல் கதவு திறந்தபடி தெரிய - பங்களாவுக்குள் இருட்டு. சப்-இன்ஸ்பெக்டர் விக்னேஷ்வரன் ரிவால்வரை கையில் எடுத்துக் கொண்டு முதல் ஆளாய் உள்ளே நுழைந்தார். தொடர்ந்து சரவணகுமாரும் மதுலிகாவும் நுழைந்தார்கள்.

இருட்டு ஹாலில் மங்கலாய் பொருள்கள் தெரிந்தன.

எஸ்.ஐ.கூப்பிட்டார்.

''சரவணகுமார்.''

''ஸார்...''

''ஸ்விட்ச் போர்டு எங்கே...?''

''இந்த சைடு கார்னர்ல இருக்கு ஸார்...''

''இப்ப ஸ்விட்ச்சைப் போட்டுப் பாருங்க...''

சரவணகுமார் இருட்டில் மெதுவாய் நகர்ந்து போய் - ஸ்விட்ச்சைத் தட்டினாள்.

சாண்ட்லியர் விளக்கு உடனே எரிந்தது.

''கரண்ட் பெயிலியர்ன்னு சொன்னீங்க...?''

''இப்ப... எப்படி எரியுதுன்னு புரியலை ஸார்...''

''ரவிஷங்கரோட தலை எங்கே கிடந்தது...?''

''அந்த மாடிப்படிக்குக் கீழே...''

''வாங்க... போய்... பார்க்கலாம்.''



ஹாலைக் கடந்து மாடிப்படிகளை நெருங்கினார்கள். திகைத்தார்கள். மாடிப்படிகளுக்கும் கீழே எதுவும் காணப் படாமல் வெறுமையாய் இருந்தது.

# 11

''இந்த இடம்தான் ஸார்... இதே இடத்துலதான் ரவி ஷங்கரோட தலை விழுந்து கிடந்தது. பார்த்தீங்களா... ரத்தக் கறைகூடத் தெரியுது...''

விக்னேஷ்வரன் குனிந்து பார்த்தார். ரத்தக்கறைகள் அங்கங்கே தீற்றல் தீற்றலாய் தெரிந்தன.

ஷூக்களை கழற்றி ஓரமாய் வைத்துவிட்டு மாடிப் படிகளில் ஏறினார். ஒவ்வொரு படியிலும் சில ரத்தத் துளிகள் உறைந்து தெரிந்தன.

மேலே வந்தார்.

மாடி வராந்தாவிலும் ரத்தச் சேதம் தெரிந்தது.

சாக்ஸ் அணிந்த கால்களோடு - வராந்தா ஓரமாய் நடந்து எதிர்ப்பட்ட அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

யாரும் தட்டுப்படவில்லை.

அறையிலிருந்த மின்சார விளக்கை உயிர்ப்புக்குக் கொண்டு வந்து அறையைப் பார்வையால் கழுவினார்.

பின்னால் காலடிச் சத்தம் கேட்டது.

திரும்பினார்.

சரவணகுமாரும் மதுலிகாவும்.

''ப்ளட் ஸ்ட்ரெயின் பட்ட இடங்களில் காலை வெச் சுடலையே...?''

''இல்ல ஸார்.''

''ரவிஷங்கர் இங்கே வெச்சுத்தான் கொலை செய்யப்பட் டிருக்கணும். ஏன்னா... ப்ளட் இந்த ரூம்ல சிந்தியிருக்கு...''

''ஒரு விஷயம் எனக்குப் புரியலை எஸ்.ஐ. ஸார். நாங்க இந்த கெஸ்ட் ஹவுஸில் இருக்கும்போது - எங்க கண் முன்னாடியே - ரவிஷங்கரோட தலையை மாடிப் படிகளில் உருட்டி விட்டாங்க... இப்ப அந்தத் தலையை அப்புறப்படுத்தி யிருக்காங்க. அது ஏன்னு புரியலை...''

''எனக்கும் அந்த விஷயம் குழப்பமாய்த்தான் இருக்கு...'' சொன்ன விக்னேஷ்வரன் ஜன்னல் பக்கமாய் போய் நின்று வெளியே எட்டிப் பார்த்தார்.

கெஸ்ட் ஹவுஸின் இடது பக்க தோட்டமும் - தோட்டத்தின் நடுவில் ரூம் அமைப்பில் உட்கார்ந்திருந்த சமாதியும் தெரிந்தது.

பக்கத்தில் வந்து நின்ற சரவணகுமார் சொன்னான்.

''அதான் ஸார்... நாங்க சொன்ன சமாதி...''

விக்னேஷ்வரன் அந்த சமாதியைப் பார்த்துக் கொண் டிருக்கும்போதே -

தொலைவில் -

காட்டுப் பிரதேசப் பாதையில் -

அந்த இரண்டு வெளிச்ச கண்கள் தெரிந்தன.

இருட்டின் பின்னணியில் அவசரம் காட்டி வேக வேகமாய் - நகர்ந்தன.

''சரவணகுமார்...''

''ஸார்...''



''அந்த வெளிச்சத்தைப் பார்த்தீங்களா...?''

பார்த்துவிட்டு சொன்னான்.

''ஏதோ வெகிகிள் மாதிரி தெரியுது ஸார்...''

''ஹெட்லைட் வெளிச்சம் மாதிரித் தான் தெரியுது...''

பார்த்துக் கொண்டு நின்றார்கள். வெளிச்சக் கண்கள் கொஞ்சம் கொஞ்சமாய் பெரிதாகி - அடுத்து வந்த நிமிஷ நேரத்திற்குள் கெஸ்ட் ஹவுஸ் பங்களாவை நெருங்கியது.

அது ஒரு கார்.

திறந்திருந்த காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்தது.

## 12

கார் உள்ளே நுழைந்ததும் - மாடியில் இருந்த விக்னேஷ் வரன், சரவணகுமார், மதுலிகா மூன்று பேரும் வேக வேக மாய் கீழே இறங்கி வந்தார்கள்.

போர்டிகோவை நெருங்கியபோது -

நின்ற காரிலிருந்து ரவிஷங்கரின் அப்பா ரத்ன சபாபதியும் அண்ணன் க்ருபாஷங்கரும் வியர்த்து வழிகிற முகங்களோடு படபடப்பாய் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

சரவணகுமார் எஸ்.ஐ.யிடம் சொன்னான்.

''அவங்கதான் ஸார் ரவிஷங்கரோட ஃபாதரும் ப்ரதரும்...''

நைட்கவுன் தரித்து அறுபது வயதான - ரத்ன சபாபதி பதட்டமாய் நடந்து வந்து - விக்னேஷ்வரனின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

''ஸ... ஸார்... ரவிஷங்கர்... உயிர்க்கு... உயிர்க்கு...'' பேச முடியாமல் தொண்டை அடைத்துக் கொண்டது.

''உ... உ... உங்களுக்கு எ... எப்படித் தகவல்...?''

''எங்களுக்கு போன் வந்தது...''

''என்னன்னு...?''

''சிறுவாணி கெஸ்ட் ஹவுஸ்ல ரவிஷங்கரோட தலை தனியாக் கிடக்குது. போய் பாருங்கன்னு...! யாரோ போன் பண்ணியிருந்தாங்க...''

''போன் பண்ணினது யார்ன்னு தெரியலை...?''

''தெரியலை...! உடனே அங்கிருந்து கெஸ்ட் ஹவுஸுக்கு போன் பண்ணி - சரவணகுமாரை காண்டாக்ட் பண்ண நினைச்சோம். ஆனா போன் இங்கே டெட். போன் செய்தி உண்மையாய் இருக்குமோன்னு நினைச்சு காரை எடுத்துக் கிட்டு வந்தோம்...''

விக்னேஷ்வரன் ரத்னசபாபதியை ஏறிட்டார். ''ஸாரி டு ஸே திஸ்... உங்களுக்கு வந்த போன் செய்தி உண்மையானது தான்... ரவிஷங்கரோட வெட்டுப்பட்ட தலையை சரவண குமாரும், மதுலிகாவும் பார்த்திருக்காங்க. மாடிப்படிகளில் உருண்டு வந்து கீழே வந்து விழுந்த தலையைப் பார்த்ததும் - ரெண்டு பேரும் பயந்து போய் செம்மேடு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து விபரத்தை சொன்னாங்க. நான் உடனே புறப் பட்டு வந்தேன். பங்களாவுக்கு வந்து பார்க்கும் போது ரவி ஷங்கரோட வெட்டுப்பட்ட தலையைக் காணோம்...''

க்ருபாஷங்கர் ''எ... எ... என்னது...?'' என்று திகைத்துக் கொண்டிருக்க - ரத்னசபாபதி போர்டிகோ தூணுக்கு சாய்ந்து ஒரு தற்காலிக மயக்கத்துக்குப் போனார்.

விக்னேஷ்வரன் சரவணகுமாரிடம் திரும்பினார். ''நீங்க ரத்னசபாபதிக்கு மயக்கத்தைத் தெளிவிச்சு ஆசுவாசப்படுத்



திட்டிருங்க... நான் இப்ப வந்துடறேன்'' என்று சொன்னவர் ஸ்தம்பித்து நின்றிருந்த க்ருபாஷங்கரின் தோளைத் தொட் டார்.

''ஒரு நிமிஷம் என் கூட வாங்க...''

க்ருபாஷங்கர் அவரைத் தொடர்ந்தான்.

''உங்களுக்கு செல்வியோட வீடு தெரியுமா?''

''தெரியும்...''

''எங்கே...?''

''பக்கத்துலதான்...''

''நடந்தே போயிடலாமா...?''

''ம்...''

''வாங்க போலாம்...''

அரையிருட்டில் நடந்தார்கள். க்ருபாஷங்கர் தலை குனிந்தபடி நடக்க விக்னேஷ்வரன் கேட்டார். ''ரவிஷங்கர் க்ளப்புக்கு போயிருக்கிறதாய் போன்ல சரவணகுமார் கிட்ட சொன்னது நீங்கதானே...?''

''ஆமா...''

''ரவிஷங்கர் எத்தனை மணிக்கு க்ளப்புக்குப் போனார்...?''

''காலையில பத்து மணி சுமார்க்கு...''

''க்ளப்புக்குப் போனவர் திரும்பவேயில்லை...?''

''இல்லை...''

''எந்த க்ளப்...?''

''காஸ்மோ ரெக்ரியேஷன் க்ளப்...''

''ரவிஷங்கர்க்குப் பிஸினஸ்...?''

''ஏதும் இல்லை. சும்மாத்தான் இருந்தான்... அப்பா வகையிலேயும் அம்மா வகையிலேயும் நிறைய சொத்து இருக்கு. அதனால எனக்கோ தம்பிக்கோ பிசினஸ் பண்ணி சம்பாதிக்கணும்னு தோணலை...''

''அப்படின்னா ரவிஷங்கர் தினமும் க்ளப்புக்கு போயிரு வார்?''

''ஆமா...''

''ப்ரதர்ஸ் நீங்க ரெண்டு பேர் மட்டும்தான்...?''

''ஆமா...''

''ரவிஷங்கர்க்கு ஃப்ரண்ட்ஸ்?''

''நிறைய பேர் இருக்காங்க...''

''ரொம்பவும் நெருக்கமான ஃப்ரண்ட்ஸ்...?''

''அப்படி யாரும் இல்லை...''

''சரவணகுமார்...?''

''ஃப்ரண்ட்ஸ்கள்ள ஒருத்தன் அவ்வளவுதான்...?''

சில்வண்டுகள் இரைச்சலிட்டுக் கொண்டிருந்த பாதையில் நடந்து வளைவில் திரும்பினார்கள்.

''ரவிஷங்கரோட மரணத்துக்கு எது, யார், காரணமாயிருக் கும்ன்னு நினைக்கறீங்க...?''

''எ... எனக்குத் தெரியலை...'' - சொன்ன க்ருபா ஷங்கர் சட்டென்று நின்று அந்தக் குடிசையைக் காட்டினான்.

''அதான் செல்வியோட வீடு...''

விக்னேஷ்வரன் நாணல் மண்டியிருந்த சின்ன சரிவில் இறங்கி - குடிசையை நெருங்கினார். சாத்தியிருந்த கதவின் நாதாங்கியைப் பிடித்து - பலமாய் ஆட்டினார். பின் கதவைத் தட்டினார்.



''த்தட்... த்தட்...''

உள்ளேயிருந்து ஒரு ஆண் குரல்.

''ஆறது...''

''கதவைத் தொற...''

குடிசைக்குள்ளே குரல் முனகியது. 'இந்த நேரத்துல யார்ன்னு தெரியலையே...?'

கதவு தயக்கமாய் திறந்தது.

கையில் அரிக்கேன் லாந்தருடன் ஒரு கிழவனின் முகம் தெரிந்தது.

''ஆரு...?''

க்ருபாஷங்கர் முன்னால் வரவும் - கிழவர் கும்பிட்டார்... ''அ... அய்யா... நீங்களா? இந்த நேரத்துல...?''

''இவன் செல்வியோட அப்பா...''

விக்னேஷ்வரன் கிழவனை ஏறிட்டார்.

''உம்பொண்ணு செல்வி எங்கே?''

''தூங்கிட்டிருக்காய்யா...''

''எழுப்பு...''

''அய்யா எதுக்கோசரம்...?''

''சொல்றேன்... மொதல்ல அவளை எழுப்பி கூட்டிகிட்டு வா.''

கிழவன் பீதியாய் உள்ளே போனான். ''தாணாக்காரரு வந்திருக்காரு... வெவகாரம் என்னன்னு தெரியலையே...! ஏய்... செல்வி... எந்திரி புள்ளே!''

''இன்னா... நய்னா...?''

''எந்திரி புள்ளே...! தாணாக்காரரோடு எசமான் வந்திருக்கார்'' கிழவன் லாந்தர் விளக்கோடு வர - செல்வி பின் தொடர்ந்து - தலையைச் சொறிந்து கொண்டே வந்தாள்.

விளக்கு வெளிச்சத்தில் அவளுடைய முகத்தைப் பார்த்த விக்னேஷ்வரனும் க்ருபாஷங்கரும் திடுக்கிட்டார்கள்.

செல்லியின் கடைவாய் ஓரம் நீளமாய் ஒரு ரத்தக் கோடு.

## 13

**செ**ல்வி தூக்கக் கலக்கத்தோடு கும்பிட்டாள்... க்ருபாஷங்கரைப் பார்த்து

''அய்யா...!''

விக்னேஷ்வரன் அவளை ஏறிட்டார்.

''கடைவாய்ல என்ன ரத்தம்...?''

கிழவன் குறுக்கிட்டுச் சொன்னான். ''எம் பொண்ணுக்கு தூங்கறப்ப பல்லைக் கடிக்கிற பழக்கம் இருக்குங்கய்யா... சில சமயத்துல நாக்கையும் கடிச்சுக்குவா... அப்படி கடிச்சுக்கும் போது ரத்தம் வந்துடும்... வாயைத் தொட புள்ளே...!''

செல்வி அலட்சியமாய் - தன் சேலைத் தலைப்பால் கடைவாயில் வழிந்திருந்த ரத்தத்தை ஒற்றிக் கொண்டாள்.

விக்னேஷ்வர் கேட்டார்.

''பங்களாவிலிருந்து எத்தனை மணிக்கு வெளியே வந்தே?''



''பத்து மணி சுமார் இருக்கும்.''

''சரவணகுமாரை யாராவது பார்க்க வந்தாங்களா?''

''இல்லீங்களே...?''

''பத்து மணிக்கு அப்புறம் நீயோ உங்கப்பாவோ பங்களாவுக்குள்ளே போனீங்களா...?''

''இல்லையே...''

''ரெண்டு பேரும் வெளியே வந்து இப்படி நில்லுங்க...''

''அய்யா... ஏதாச்சும் விவகாரங்களா...?'' எதுக்கோசரம் எங்களை...?

''பேசாம இப்படி வந்து நில்லுங்க...''

அதட்டல் போட்டதும் நடுங்கி நின்றார்கள். விக்னேஷ்வரன் குடிசைக்குள் நுழைந்தார்.

''க்ருபாஷங்கர்! அந்த அரிக்கேன் விளக்கை வாங்கிட்டு வாங்க...''

அவன் லாந்தரோடு உள்ளே வந்தான்.

''இவங்களை சந்தேகப்படறீங்களா எஸ்.ஐ. ஸார்.''

''லேசா...! இந்த விஷயத்துல யாரையும் நெக்லக்ட் பண்ண முடியாது. உடனுக்குடன் செக் பண்ணினா ஏதாவது மாட்டலாம்... நீங்க அரிக்கேனை உயர்த்தி பிடியுங்க... நான் குடிசையை மளமளன்னு சோதனை போட்டுடறேன்...''

க்ருபாஷங்கர் அரிக்கேன் விளக்கை உயர்த்திப் பிடிக்க - அது சிந்திய வெளிச்சத்தில் - குடிசையில் இருந்த பொருள்களைக் குடைய ஆரம்பித்தார் விக்னேஷ்வரன்.

பத்து நிமிஷ நேரத் தேடல்.

எதுவும் கிடைக்காமல் குடிசைக்குள்ளிருந்து வெளிப்பட்டார். செல்லியும் அவளுடைய அப்பனும் - மார்புக்கு குறுக்காய் கைகளைக் கட்டிக் கொண்டு ஓரமாய் நின்றிருந்தார்கள். விக்னேஷ்வரன் அவர்களை நெருங்கினார்.

''வாட்ச்மேன் நல்லக்கண்ணு தன்னோட சம்சாரத்தை டவுன்ல எந்த ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கான்னு தெரியுமா?''

செல்லி குறுக்கிட்டுச் சொன்னாள்.

''பொன்னையா ஆஸ்பத்திரியில! வழக்கமா அந்த ஆஸ் பத்திரிக்குத்தான் அவரோட சம்சாரத்தைக் கூட்டிட்டுப் போவார்...''

# 14

மறுநாள் பதினோரு மணி.

போலீஸ் கமிஷனர் அலுவலகம். கமிஷனர் சகாயத்துக்கு முன்னால் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் ரத்னசபாபதி, க்ருபாஷங்கர், சரவணகுமார், மதுலிகா உட்கார்ந்திருக்க - பக்கத்தில் எஸ்.ஐ.விக்னேஷ்வரன் அட்டென்ஷனில் நின்றபடி கமிஷனரின் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந் தார்.

''ரவிஷங்கரோட வெட்டப்பட்ட தலையை சரவண குமாரும், மதுலிகாவும் பார்த்திருக்காங்க. தலை மாடிப் படிகளில் உருண்டு வந்ததுக்கு அடையாளமாய் ரத்தமும் அங்கே சிதறியிருக்கு... இல்லையா?''

''ஆமா ஸார்...''



''செம்மேடு போலீஸ் ஸ்டேஷனிலிருந்து கெஸ்ட் ஹவுஸ் போய் சேர்றதுக்குள்ளே... தலை காணாமே போயிருக்கு...''

''ஆமா... ஸார்...''

''கெஸ்ட் ஹவுஸை நல்லா செக் பண்ணிப் பார்த்தீங்களா?''

''பார்த்தோம் ஸார். போலீஸ் டாக்ஸை விட்டு ஸ்மெல் பண்ணவும் வெச்சோம்... பட் ரிசல்ட் எதுவும் கிடைக்கலை...''

''பொன்னையா நர்சிங்ஹோமுக்கு போய் வாட்ச்மேன் நல்லக்கண்ணுவை விசாரிச்சீங்களா...?''

''விசாரிச்சோம் ஸார்... அவன் நேத்து சாயந்திரத்தி லிருந்து ராத்திரி முழுக்க - அவனுடைய சம்சாரத்துக்குப் பக்கத்திலேயேதான் இருந்திருக்கான்.''

''டாக்டர்கிட்டேயும் நர்ஸஸ்கிட்டேயும் கேட்டு கன்ஃபர்ம் பண்ணிகிட்டீங்களா?''

''பண்ணிகிட்டோம் ஸார்... வாட்ச்மேன் நல்லக்கண்ணுவும் வேலைக்காரப் பெண் செல்லியும் ஹார்ம்லஸ் டைப். ரவிஷங்கர் கொலை சம்பந்தமா அவங்க மேல சந்தேகப்பட எந்த முகாந்திரமும் இல்லை...''

கமிஷனர் சகாயம் ரத்னசபாபதியிடம் திரும்பினார். ''போலீஸ் விசாரணை மூலமா தெரியற உண்மைகளைக் காட்டிலும் - உங்க மூலமா வர்ற உண்மைகளுக்கு வேல்யூ அதிகம். ரவிஷங்கர் என்ன காரணத்துக்காக கொலை செய்யப் பட்டிருப்பான்னு நினைக்கறீங்க...?''

ரத்ன சபாபதி கண்ணீரோடு தலையாட்டினார். ''கமிஷனர் ஸார்! ரவிஷங்கர்க்கு நிறைய ஃப்ரண்ட்ஸ். கொஞ்சம் கெட்ட சகவாச பழக்கங்களும் இருந்தது. வீட்டை விட்டு நினைச்ச நேரம் வெளியே போவான். வருவான். நான் ஏதாவது

கண்டிச்சா... முறைச்சுப் பார்ப்பான்... சில நேரங்கள்ல சத்தம் போடுவான்...''

''ரவிஷங்கர்க்கு காதல் விவகாரம் ஏதாவது?''

''தெரியலை...''

''க்ருபாஷங்கர்! உங்களுக்குத் தெரியுமா?''

''காதல் விவகாரம் இருந்த மாதிரித் தெரியலை ஸார்... ஆனா...''

''என்ன... சொல்லுங்க...''

''பெண்கள்கிட்ட சகவாசம் இருந்தது...''

''அப்படிப்பட்ட பொண்ணு யாராவது தெரியுமா?''

''தெரியாது... ஸார்...''

''போற இடமாவது தெரியுமா?''

''தெரியாது ஸார்...?''

கமிஷனர் - சரவணகுமாரிடம் திரும்பினார். 'ரவிஷங்கரைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்...?'

''ஸார்... அவன் என்னோட காலேஜ் மேட். காலேஜ் டேஸிலேயே அவன் ஒரு ப்ளே பாய். செலவு பண்ண அஞ்ச மாட்டான். படிப்பை முடிச்சதுமே எனக்கும் அவனுக்கும் அவ்வளவு தொடர்பில்லை. எப்பவாவது பார்த்துக்குவோம். பேசிக்குவோம். என்னோட கல்யாண பத்திரிகையை அவனுக்கு குடுக்கப் போனப்பவே - சிறுவாணி கெஸ்ட் ஹவுஸ்ல உன்னோட ஹனிமூனைக் கொண்டாடுடான்னு ரவிஷங்கர் சொன்னான். மறுத்துப் பார்த்தேன். அவன் கேட்கலை... பிரியமா சொல்றானேன்னு நானும் ஒத்துக்கிட்டேன்...''



கமிஷனர் நெற்றியைச் சொறிந்தார் குழப்பமாய்.

''ஹனிமூன் கப்புளை கெஸ்ட் ஹவுஸுக்கு போகச் சொல்லிவிட்டு - ரவிஷங்கரும் எதுக்காக அங்கே போகணும்...? அப்படி அங்கே போன அவனைக் கொலை பண்ணினது யாராக இருக்கும்...?''

மதுலிகா குறுக்கிட்டாள்.

''ஸார்... சமாதி மேல யாரோ ஒருத்தர் உட்கார்ந்துட்டிருந்ததை நான் பார்த்தேன்...''

க்ருபாஷங்கர் இடைமறித்தான். ''கமிஷனர் ஸார்! மதுலிகா சமாதி மேல பார்த்தது உருவமில்லை... சமாதி மேல் நாங்க கட்டியிருக்கிற விளக்கு மாடம் தான் அது... சுண்ணாம்பு பூச்சு பூசியிருக்கிறதுனால... ராத்திரி நேரத்துல பார்க்கும்போது வெள்ளையா ஒரு உருவம் உட்கார்ந்துட்டிருக்கிற மாதிரி தெரியும்.

''ஹி... ஈஸ் கரெக்ட் ஸார்...'' என்றார் விக்னேஷ்வரன். ''மதுலிகா சொன்ன பிறகு நானும் அந்த சமாதிக்குப் போய் பார்த்தேன். காம்பௌண்ட் கேட்டிலிருந்து சமாதியோட வ்யூவைப் பார்க்கும்போது - அந்த விளக்கு மாடம் ஒரு மனுஷ உருவம் மாதிரிதான் தெரியுது...''

மேஜை மேலிருந்த டெலிபோன் கிணுகிணுத்தது.

சகாயம் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''..........''

''ம்.... சொல்லுங்க...''

''.........''

''ஈஸிட்... எங்கே...?''

''..........''

''ஸ்பாட்ல இப்ப யார் இருக்காங்க...?''

''..........''

''சரி... சம்பந்தப்பட்டவங்களும் இங்கேயேதான் இருக்காங்க... அவங்களையும் கூட்டிகிட்டு அரை மணி நேரத்துக்குள்ளே ஸ்பாட்டுக்கு வந்துடறேன்.''

சகாயம் ரிஸீவரை வைத்துவிட்டு - எதிரில் உட்கார்ந்திருந்த ரத்ன சபாபதியைப் பார்த்தார்.

''ஸாரி... டு ஸே திஸ்... போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து ஒரு ந்யூஸ். கொஞ்ச நேரத்துக்கு முந்தி தலையில்லாத ஒரு இளைஞனின் சடலத்தை வாலாங் குளத்துக்குப் பக்கத்தில் இருக்கிற கருவேல மரக்காட்டுக்குள்ளே வெச்சு கண்டெடுத்திருக்காங்க...''

''அது... அது...?''

''உங்க பையன் ரவிஷங்கரோட உடம்புதானான்னு நீங்கதான் பார்த்துச் சொல்லணும்... தலையில்லாத உடம்பை தீயில் எரிக்க முயற்சி பண்ணியிருக்காங்களாம்...''

ரத்ன சபாபதி நொறுங்கிப் போய் எழுந்தார். கண்களில் நீர் கனத்துத் தெரிய - கோட் பாக்கெட்டில் இருந்த - கர்ச்சீப்பை எடுத்து ஒற்றிக் கொண்டார்.

## 15

**வா**லாங்குளம் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்க - குளத்தையொட்டி பின்பக்கம் தெரிந்த கருவேல மரக்காட்டுக்குப் பக்கமாய் போய் - ரத்ன சபாபதியின் காரும், போலீஸ் ஜீப் இரண்டும் போய் நின்றன.



கமிஷனர் சகாயம் முதல் ஆளாய் இறங்க - காத்திருந்த இன்ஸ்பெக்டர் ஒருவர் வேகவேகமாய் ஓடி வந்து சல்யூட் செய்தார்.

''பாடி எங்கே...?''

''உள்ளே ஸார்...''

''வாங்க...''

இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து சகாயத்தை ரத்னசபாபதி, க்ருபாஷங்கர், சரவணகுமார், மல்லிகா, விக்னேஷ்வரன் தொடர்ந்தார்கள்.

சகாயம் அந்த இன்ஸ்பெக்டரிடம் பேசிக் கொண்டே ஒழுங்கற்ற செம்மண் பாதையில் நடந்தார்.

''தலையில்லாத பாடியா?''

''ஆமா ஸார்...''

''பாடியோட கண்டிஷன் எப்படி இருக்கு...?''

''தீ வெச்சி எரிக்க முயற்சி பண்ணியிருக்காங்க ஸார். ஆனா பாடி சரியா எரியலை. தீய்ஞ்ச மாதிரி இருக்கு...''

''உடம்புல எதாச்சும் வெட்டுக்காயம்...?''

''அப்படி ஏதும் 'கட் மார்க்ஸ்', தெரியலை... ஸார்...''

''பாடியை மொதல்ல பார்த்து தகவல் குடுத்தது யாரு...?''

''இந்த ஏரியாவில் குடியிருக்கிற கான்ஸ்டபிள் ஒருத்தர் ஸார். கருவேலக் குச்சி ஒடிக்கிறதுக்காக அந்தப் பக்கம் வந்தவர் பாடியைப் பார்த்திருக்கார்..''

ஸ்தலத்துக்கு வந்தார்கள்.

வெள்ளை விரிப்பு போர்த்தப்பட்டு ஒரு உடல் தெரிய - பக்கத்தில் நின்றிருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் அட்டென்ஷனுக்கு வந்தார்கள்.

சகாயம் சொன்னார்:

"துணியை ரிமூவ் பண்ணு மேன்."

விரிப்பை எடுத்தார்கள்.

ஐம்பது சதவீதம் கருகிய நிலையில் - தலையில்லாத அந்த முண்ட உடம்பு கரிக்கட்டை மாதிரித் தெரிந்தது.

கமிஷனர் கேட்டார்.

"எனி பிலாங்கிங்க்ஸ் ஆஃப் பாடி...?"

"எதுவும் கிடைக்கலை ஸார்..."

"பாடி தீயில் எரிந்திருக்கிறதுனால... அதனோட நேச்சுரல் ஸ்ட்ரக்சர் போயிருச்சு. இந்த ஸ்ட்ரக்சரை வெச்சு... ஆள் யார்ன்னு கண்டுபிடிக்கிறது கஷ்டம்" - சொன்ன சகாயம் ரத்ன சபாபதியையும் க்ருபா ஷங்கரையும் ஏறிட்டார்.

"அந்த பாடியைப் பார்த்து உங்களாலே ஐடென்டிஃபை பண்ண முடியுமா...?"

ரத்னசபாபதி தலையாட்டினார்.

"இம்பாஸிபிள்...! நீங்க சொன்ன மாதிரி நெருப்பு பாடியோட ஸ்ட்ரக்சரை சாப்பிட்டிருக்கு... தோலோட இயற்கையான நிறம் ஒரு இடத்துலகூட தெரியலை."

"பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்ணினா ஏதாவது விபரம் கிடைக்கலாம்...! இன்ஸ்பெக்டர்..."

"ஸார்..."



"பாடியை பி.எம்.க்கு உடனடியா அனுப்பி சாயந்தரத்துக்குள்ளே ரிப்போர்ட் வாங்குங்க..."

"எஸ்... ஸார்..."

கமிஷனர் பாடியை விட்டு நகர்ந்து - மறுபடியும் ஜீப் நின்றிருந்த இடத்துக்கு நடையைப்போட - எல்லோரும் அவரைத் தொடர்ந்தார்கள்.

"மிஸ்டர் க்ருபாஷங்கர்! உங்க ஃபாதர் ரொம்பவும் டயர்டா இருக்கார். அவரைக் கூப்பிட்டுகிட்டு கிளம்புங்க... இஃப் எனிதிங்க் இம்பார்ட்டெண்ட் நானே உங்க வீட்டுக்கு வர்றேன்..."

க்ருபாஷங்கர் தலையாட்டி - தன்னுடைய அப்பாவை கார்க்கு அழைத்துப்போக - கமிஷனர், சரவணகுமார் - மதுலிகாவை ஏறிட்டார்.

"உங்களை எங்கே ட்ராப் பண்ணட்டும்?"

"ராஜா ஸ்ட்ரீட் ஸார்..."

"நோ ப்ராப்ளம்... ஜீப்ல ஏறுங்க..."

"தாங்க்யூ ஸார்..."

இரண்டு பேரும் ஜீப்பில் ஏறிக் கொண்டார்கள்.

க்ருபாஷங்கரின் கார் கிளம்பியது. காரின் பின் சீட்டில் ரத்ன சபாபதி சோர்வாய் சாய்ந்து கொள்ள - அவன் ஸ்டியரிங்கைப் பிடித்தான்.

பைபாஸ் ரோட்டுக்கு வந்ததும் கார் வேகம் பிடித்தது.

"அப்பா..."

"ம்..."

''ரவிஷங்கர்க்கு எப்படி அந்த முடிவு ஏற்பட்டிருக்கும்ன்னு நினைக்கறீங்க?''

ரத்னசபாபதியின் கண்களில் நீர் வழிந்தது.

''எ... எனக்குத் தெரியலை...''

''என்னோட சந்தேகத்தை சொல்லட்டுமாப்பா...?'' க்ருபா ஷங்கர் திரும்பிப் பார்த்துச் சொல்லவும் ரத்னசபாபதி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

## 16

சப்-இன்ஸ்பெக்டர் விக்னேஷ்வரன் காஸ்மா ரெக்ரியேஷன் க்ளப்புக்கு போய்ச் சேர்ந்தபோது சாயந்தரம் ஏழு மணி.

பெரிய க்ளப். நேரத்தின் அருமையை உணராதவர்கள் நீச்சல் குளத்திலும் சீட்டாட்டத்திலும் இருந்தார்கள். சிலர் நுனி நாக்கில் ஆங்கிலம் பேசி ஸ்நாக்ஸைக் கொறித்து - காப்பி சப்பிக் கெண்டிருந்தார்கள்.

க்ளப் செக்ரட்ரியின் அறைக்குள் - அழைத்து - தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு - விபரத்தை சொல்லி பேச்சை ஆரம்பித்தார்.

''எனக்கு ரவிஷங்கரோட வெரி இண்டிமேட் ஃப்ரண்ட் ஸோட லிஸ்ட் வேணும்...''

க்ளப் செக்ரட்ரி நெற்றியில் மினுமினுப்பாய் வியர்த்துக் கொண்டே சொன்னார். ''ஸாரி... ஸார்... ரவிஷங்கர்க்கு வெரி இண்டிமேட் ஃப்ரண்ட்ஸ் யார்ன்னு எனக்குத் தெரியாது.



இங்கே க்ளப்புக்கு வந்தா உள்ளே இருக்கிற 'பார்'க்கு போயிடுவார். நல்லா சாப்பிட்டு ரெஸ்ட் ரூம்ல படுத்துத் தூங்கிடுவார். அதுக்கப்புறம் அவர் எப்ப எத்தனை மணிக்கு எந்திரிச்சுப் போவார்னு எனக்குத் தெரியாது.''

''நேத்து அவர் எத்தனை மணிக்கு வந்தார்...?''

''காலையில பத்து பத்தரை மணி இருக்கும்.''

''எப்பப் போனார்...?''

''தெரியலை...''

''யாரைக்கேட்டா தெரியும்?''

''ரிசப்ஷன்ல உட்கார்ந்துட்டிருக்கிற டெலிபோன் ஆபரேட் டரைக் கேட்டா தெரியும் ஸார்....''

''அவரை இந்த ரூமுக்குக் கூப்பிட முடியுமா...?''

க்ளப் செக்ரட்ரி இண்டர்காமில் டெலிபோன் ஆபரேட்டர் இளைஞனை வரவழைத்தார். மலையாள இளைஞன் - நெற்றியில் சந்தனக் கீற்று தெரிந்தது. வணக்கம் சொன்ன போது அதில் பாலக்காட்டு வாசனை.

''உங்க பேரென்ன...?''

''பாஸ்கரன் ஸாரே...''

''நேத்திக்கு காலையில ரவிஷங்கர் எத்தனை மணிக்கு க்ளப்புக்கு வந்தார்?''

''பத்து மணிக்கு ஸாரே...!''

''எத்தனை மணிக்கு வெளியே போனார்...?''

பாஸ்கரன் யோசித்துவிட்டு சொன்னான். ''சாயங்காலம் மணி அஞ்சு இருக்கும் ஸாரே... அவர்க்கு வெளியேயிருந்து

ஒரு டெலிபோன் கால் வந்தது. நான்தான் அவர் ரெஸ்ட் எடுத்துட்டிருக்கிற ரூமுக்கு கனெக்ஷன் குடுத்தேன். போன்ல ஒரு நிமிஷம் பேசினவர் உடனே கிளம்பிப் போயிட்டார்..."

"போன் யார்கிட்டயிருந்து வந்தது...?"

"தெரியலை ஸாரே..."

"போன்ல பேசினது ஆணா... பொண்ணா...?"

"பொண்ணு ஸாரே..."

"அவங்க பேசிகிட்டதை 'ஹியர்' பண்ணீங்களா?"

"இல்ல ஸார்..."

"வேற யாரை விசாரிச்சா உண்மை தெரியும்...?"

"எனக்கு தெரியல்லே ஸாரே..."

"ரவிஷங்கர் ரெஸ்ட் எடுக்கிற ரூம் எது...?"

"உள்ளே இருக்கு ஸாரே..."

"வந்து காட்டுங்க..."

## 17

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு - போர்வைக்குள்ளிருந்த - க்ருபாஷங்கர் தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்தான். சுவர்க்கடிகாரம் நள்ளிரவு 1.45ஐக் காட்டிக் கொண்டிருந்தது. மெதுவாய் கட்டிலை விட்டு இறங்கினான்.

"யா... யாரது...?"



"டேய் க்ருபா... கதவைத் தொற..."

வெளியே - ரத்ன சபாபதியின் குரல்.

வேகவேகமாய் கதவைத் திறந்தான் க்ருபா ஷங்கர். சால்வையைப் போர்த்திக் கொண்டு நின்ற ரத்ன சபாபதி உள்ளே பதட்டமாய் நுழைந்தார்.

"எ... என்னப்பா...?"

"என்னோட ரூம் பக்கம் யாரோ நடந்து போற மாதிரி சத்தம் கேட்டுச்சு. நீ ஏதாவது வந்தியா...?"

"இல்லேப்பா... நான் நல்லாத் தூங்கிட்டிருந்தேன். நீங்க வந்து கதவைத் தட்டின பின்னாடிதான் எந்திரிச்சேன்..."

"யாரோ நடந்து போன மாதிரி சத்தம் கேட்டதே...?"

"அது பிரமையா இருக்கும் அப்பா..."

"க்ருபா..."

"ம்..."

"நீ காத்தால கார்ல வரும்போது ஒரு சந்தேகத்தைச் சொன்னியே...?"

"மூணு வருஷத்துக்கு முந்தி... வெள்ளோடு கிராமத்துல நடந்த அந்த சம்பவத்தை சொல்றீங்களாப்பா...?"

"ம்... அதேதான்..."

அறைக்கு வெளியே யாரோ நடக்கும் சத்தம் கேட்டது.

இருவரும் முகம் மாறினார்கள்.

"சத்தம் கேட்கலை...?"

"ஆமா..."

க்ருபா வெறுமனே சாத்தியிருந்த கதவை கொஞ்சமாய் திறந்து வெளியே பார்க்க முயன்ற வினாடி -

கதவைத் தள்ளிக்கொண்டு அந்த நபர் உள்ளே நுழைந் தான். ஒரு கையில் துப்பாக்கியும் இன்னொரு கையில் ப்ரீப்கேஸுமாய் திடகாத்ர உடம்போடு இருந்த அவனைப் பார்த்ததும் - ரத்ன சபாபதியும் - க்ருபாஷங்கரும் திடுக்கிட் டார்கள்.

''ச... சரவணகுமார்...''

''நானே தான்...!''

சிரித்தான் சரவண குமார்.

# 18

''என்ன அப்பனும் மகனும் அப்படிப் பார்க்கறீங்க...? நான் எப்படி உள்ளே வந்தேன்னு ஆச்சர்யப்படறீங்களா...? புத்தி சாலி நினைச்சா புகை நுழையற இடத்துலகூட நுழைஞ்சுடு வான்...''

சரவணகுமார் சிரிக்க - இருவரும் மிரண்டார்கள்.

''நீ... நீ... நீ...''

''எதுக்காக வந்திருக்கேன்னு கேக்கறீங்களா...? ரெண்டு பேரும் சத்தம் போடாமே அந்தக் கட்டில்ல போய் உட் காருங்க... எல்லாத்தையும் விபரமா சொல்றேன்...''

இருவரும் - தடுமாறிக் கொண்டே போய் உட்கார்ந் தார்கள். சரவணகுமார் அவர்களுக்கு எதிரே இருந்த நாற்



காலிக்கு சாய்ந்தான். ப்ரீஃப்கேஸை டீபாயின் மேல் வைத்து விட்டு துப்பாக்கியால் இருவரையும் அளவெடுத்தபடி, உதட்டை அசைத்தான்.

''உங்க ரெண்டு பேரோட தலைகளைக் கொண்டு போறதுக் காகத்தான் வந்திருக்கேன்.''

ரத்னசபாபதி - க்ருபாஷங்கர் இருவரின் முகங்களும் பயத்தால் 'ப்ளீச்' செய்யப்பட்ட மாதிரி வெளுத்தது.

சரவணகுமார் தொடர்ந்தான். ''நேத்திக்கு ராத்திரி என்னோட ஆள் ஒருத்தனை வெச்சு ரவிஷங்கரோட தலையை வெட்டி எடுத்தேன். இன்னிக்கு உங்க தலைகளை நானே எடுத்துட்டுப் போலாம்னு வந்திருக்கேன்...''

சொன்னவன் - சற்றே முன்னால் சாய்ந்து - டீபாயின் மேல் இருந்த ப்ரீப்கேஸின் லாக்கர்களை விடுவித்து - திறந்தான்.

உள்ளே -

ஒரடி நீளத்துக்கு பட்டாக்கத்தி ஒன்று மின்னியது. ''நேத்து ராத்திரி ரவிஷங்கரோட கழுத்துக்கு முத்தம் கொடுத்தது இந்தக் கத்திதான்...''

க்ருபாஷங்கர் திக்கினான்.

''எ.... எதுக்காக... எ... எங்களை...''

''கொல்லணும்னு கேக்கறியா...? அதையும் சொல் லிட்டே பண்றேன். மூணு வருஷத்துக்கு முந்தி உங்க சொந்த கிராமமான வெள்ளோட்டு கிராமத்துல நீங்க மூணு பேரும் செஞ்ச கைங்கரியத்தை நினைச்சுப் பாருங்க...''

இருவரும் எச்சில் விழுங்கினார்கள். சரவணகுமார் ரத்ன சபாபதியை ஏறிட்டான்.

''கஜபதி நாய்க்கரும் அவரோட மூணு மகன்களும் ஞாப கத்துக்கு வர்றாங்களா...? அவங்களுக்கு சொந்தமான பத்து ஏக்கர் நிலத்தை யார்க்கோ பட்ட கடனுக்காக உங்ககிட்ட அடமானம் வெச்சுட்டு - வேற ஒரு நிலத்தை குத்தகைக்கு எடுத்து கஷ்டப்பட்டு உழைச்சு பணம் சேர்த்து - அவங்க கடனை அடைச்சு பத்து ஏக்கர் பூமியை மீட்க வந்தது ஞாப கத்துக்கு வருதுங்களா...? அப்படி அவங்க வந்தப்ப இன்னிக்கு நாள் நல்லாயில்லைன்னு சொல்லி - வீட்டுக்கு அனுப்பிச் சுட்டு அன்னிக்கு ராத்திரியே உங்க ரெண்டு புத்திரர்களையும் நாய்க்கர் வீட்டுக்கு அனுப்பி தூங்கிட்டிருந்த நாலு பேரையும் மயக்க மருந்தை சுவாசிக்கப் பண்ணி, கிணத்துல தூக்கிப் போட்டது ஞாபகத்துக்கு வருதுங்களா? அவங்க வெச்சிருந்த பணத்தை எடுத்துக்கிட்டு வந்ததும் - மறுநாள் காலையில் - கிணத்துல மிதந்த நாலு பேரோட பிணங்களையும் எடுத்துப் போட்டுட்டு - நிலத்தை மீட்க முடியாததனால் அப்பனும் மூணு புள்ளைகளும் கிணத்துல குதிச்சு தற்கொலை பண்ணி கிட்டதாய் ஊரை நம்ப வெச்சீங்களே அது ஞாபகத்துக்கு வருதா...?''

ரத்ன சபாபதியின் முகம் விக்கித்துப் போனது.

''இ... இ... இ... இதெல்லாம்... உனக்கு எப்படி...?''

''தெரிஞ்சதுன்னு கேக்கறீங்களா...? உண்மைங்கிறது நெருப்பு மாதிரி... எதைப் போட்டு மூடினாலும் அது புகையும். உங்க வெள்ளோடு கிராமத்துல எனக்கு வேண்டப் பட்ட ஒருத்தர் இருந்தார். அவர் மூலமா இந்த விஷயங் களையெல்லாம் தெரிஞ்சுகிட்டேன். எனக்கு மனசு ஆறலை. அதுதான் இந்தப் பழிவாங்கற படலம். நாலு அப்பாவிகளோட பத்து ஏக்கர் நிலத்துக்கு ஆசைப்பட்டு - அவங்க சாவுக்குக் காரணமான உங்க மூணு பேரையும் தீர்த்துக்கட்ட நினைச்



சேன். முதல் பலி ரவிஷங்கர். ரெண்டாவது, மூணாவது பலியை இப்ப வாங்கப் போறேன்...''

ரத்ன சபாபதி கும்பிட்டார்.

''வேண்டாம் தம்பி... என்னையும் என் பையனையும் ஒண்ணும் பண்ணிடாதே...! நாயக்கரோட பத்து ஏக்கர் பூமி பொன் விளையற பூமியா இருந்ததனால், அதை நானே வெச்சுக்க ஆசைப்பட்டேன். ஆசை கண்ணை மறைச்சுடுச்சு... அந்த நாலு பேரோட சாவுக்குக் காரணமாயிருந்துட்டோம்... அதை நினைச்சு நான் வருத்தப்படாத நாள் இல்லை...''

''வருத்தப்பட்டா போதுமா...?''

''தப்பு தான் தம்பி... ஏதோ புத்தி கெட்டத்தனமா நடந்து கிட்டோம்... அதைப் பெரிசா நினைக்காமே...''

''நினைக்காமே...?''

''தம்பி...! உனக்கு வேண்டிய பணம் தர்றோம். வேணும்னா அந்த பத்து ஏக்கர் நிலத்தையும் உன்னோட பேர்க்கு எழுதி வைக்கிறோம். எங்களை ஒண்ணும் பண்ணிடாதே தம்பி...''

''நிஜமாவா சொல்றீங்க...?''

''ஆமா தம்பி...''

''எனக்கு மட்டும் பங்கு கொடுத்தா போதாதே...?''

''பின்னே வேற யார்க்கு தரணும்...?''

''எனக்குத்தான்...''

குரல் கேட்டு ரத்ன சபாபதியும் க்ருபாஷங்கரும் திரும்ப - போலீஸ் கமிஷனர் சகாயம் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்.

# 19

ரத்னசபாபதியும் க்ருபாஷங்கரும் அதிர்ச்சியின் உச்சிக்கே போனார்கள்.

கமிஷனர் சகாயம் அவர்களுடைய தோளைத் தட்டி விட்டுச் சிரித்தார். ''செஞ்ச நாலு கொலைகளை மறைக்கிறதுக்காக சரவணகுமார்க்கு பத்து ஏக்கர் நிலம் எழுதி வெக்கப் போறதா சொல்றீங்களே... அதைக் கண்டுக்காமே இருக்கணும்ன்னா எனக்கு... எதை எழுதி வெக்கப் போறீங்க...?''

''ஸ... ஸார்...''

கமிஷனர் தொடர்ந்தார். ''உங்க வாயிலிருந்து இப்படியொரு... வாக்குமூலத்தை... வரவழைக்கத் தான் இவ்வளவு நாளா கஷ்டப்பட்டு இப்படியொரு ட்ராமாவை செட் பண்ணினோம்...''

''ட்... ட்... ட்ராமா...?''

அவர்கள் திகைக்க - கமிஷனர் சகாயம் தொடர்ந்தார். ''ட்ராமாதான்...! இந்த ட்ராமாவில் நான் ஒரு பாத்திரம். சரவணகுமார் ஒரு பாத்திரம், உங்க கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேன் நல்லக்கண்ணு ஒரு பாத்திரம்...''

க்ருபாஷங்கர் அதிர்ச்சியை ஜீரணித்துக் கொண்டு கேட்டான். ''அது ட்ராமான்னா... ரவிஷங்கரைக் கொன்னது...?''

''ரவிஷங்கரை யாருமே கொல்லலை... அவன் உயிரோடு தான் இருக்கான்...'' சொன்ன கமிஷனர் குரல் கொடுத்தார்.

''விக்னேஷ்வரன்!''



எஸ்.ஐ. விக்னேஷ்வரன் ரவிஷங்கரைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார். ரவிஷங்கரின் முகம் களைத்து வியர்த்திருந்தது.

''அ... அப்படீன்னா... அந்தத் தலை...?''

சரவணகுமார் குறுக்கிட்டான். ''மாடிப்படியில் உருண்ட ரவிஷங்கரோட தலையைத்தானே சொல்றீங்க...? அது ரவிஷங்கர் தலை மாதிரியே கெட்டியான-மெழுகாலே செய்யப்பட்ட தலை. ரத்தம் மட்டும் நிஜம்...'' - சிரித்த சரவணகுமார் தொடர்ந்தான்.

''போலீஸ் கமிஷனர் சகாயம் என்னோட அப்பாவுக்கு வேண்டிய நண்பர். நானும் ரவிஷங்கரும் காலேஜ்மேட்ஸ்ன்னு தெரிஞ்சுகிட்ட அவர் ஒரு மாசத்துக்கு முந்தி ஒரு நாள் ராத்திரி என் வீட்டுக்கு வந்தார். வெள்ளோடு கிராமத்தில் மூணு வருஷத்துக்கு முந்தி அப்பாவும் மூணு மகன்களும் தற்கொலை பண்ணிகிட்ட கேஸில் தனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறதாகவும் அந்த சந்தேகப்படி - ரத்ன சபாபதியும் அவரோட ரெண்டு மகன்களும்தான், நாய்க்கர் குடும்பத்தை கொலை செய்திருக்கலாம்னு அபிப்பிராயப்பட்டார். இந்தக் கேஸை மறைமுகமாக டீல் பண்ணி அவங்க வாயிலிருந்தே உண்மையை வரவழைக்க நானும் அவரும் சேர்ந்து திட்டம் போட்டோம்... திட்டப்படி எனக்கு கல்யாணம் முடிஞ்சதும். ஹனிமூன் டேஸை கழிக்கிறதுக்காக - சிறுவாணி கெஸ்ட் ஹவுஸில் போய் தங்க வேண்டியது. அதுக்கான அனுமதியை முன்னாடியே ரவிஷங்கர்கிட்டே பேசி வாங்கிட வேண்டியது. கெஸ்ட் ஹவுஸில் நானும் மதுலிகாவும் மட்டும்தான் இருக்கணும். வாட்ச்மேன் நல்லக்கண்ணுவை - மிரட்டி - எனக்கு ஒரு லெட்டர் எழுத வெச்சு - அவனைப் பெண்டாட்டியோட ஆஸ்பத்திரிக்கு துரத்த வேண்டியது. நள்ளிரவுக்கு மேல போலீஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த ஆள் ஒருத்தர் கெஸ்ட் ஹவுஸுக்குள்ளே நடமாடி - மாடிப் படிகளிலிருந்து மெழுகாலான ரவி

ஷங்கரோட தலையை - நிஜமான ரத்தம் தடவி உருட்ட வேண்டியது. இந்த ஏற்பாடெல்லாம் என்னோட மனைவி மதுலிகாவுக்கு தெரியாது. நான் தெரியப்படுத்தவும் இல்லை. காரணம் மதுலிகாவோட பயம், துடிப்பு நிஜமானதா இருக்கணும். அதே மாதிரி செம்மேடு சப்-இன்ஸ்பெக்டர் விக்னேஷ்வரனுக்கும் - நாங்க பண்ணியிருக்கிற ஏற்பாடுகள் தெரியாது. அவருடைய போலீஸ் தோரணையான விசாரணை இயல்பா இருந்தாத்தான்... ரத்ன சபாபதிக்கும், க்ருபா ஷங்கர்க்கும் சந்தேகம் வராதுன்னு நினைச்சோம். நாங்க போட்ட திட்டப்படியே எல்லாம் நடந்தது.''

கமிஷனர் சகாயம் தொடர்ந்தார். ''க்ளப்பில் இருந்த ரவிஷங்கர்க்கு - அவனுக்கு வேண்டிய ஒரு பலான பெண்ணை விட்டுப் போன் பண்ணி வரவழைத்தோம். கஸ்டடிக்கு கொண்டு போய் அடைச்சு வெச்சோம். சரவணகுமாரும் மதுலிகாவும் செம்மேடு போலீஸ் ஸ்டேஷனுக்கு கிளம்பிப் போனதும் உங்களுக்கு போன் பண்ணி, 'சிறுவாணி கெஸ்ட் ஹவுஸில் ரவிஷங்கரோட தலை தனியாக் கிடக்குது போய் பாருங்கன்னு குரலை மாத்தி போன் பண்ணியது நான்தான். ரவிஷங்கரோட தலை காணோம்ன்னதும் உங்களுக்கு இந்த கேஸ்ல சந்தேகம் வரக்கூடாதுன்னு நினைச்சு - ஜி.ஹெச்ல இருந்த ஒரு அநாதைப் பிணத்தோட தலையைத் - துண்டித்து எடுத்துட்டு - அதோட முண்டபாகத்தை வாலாங்குளம் கருவேலக்காட்டுக்கு கொண்டு போய் - அடையாளம் தெரியாதபடிக்கு லேசா எரிச்சு... அது ரவிஷங்கரோட பாடியாய் இருக்கலாமோங்கிற சந்தேகத்தை உங்களுக்கு உண்டு பண்ணினோம். நாங்க வெச்ச குறி தப்பலை. நீங்க ரெண்டு பேரும் கலவரப் பட்டீங்க. உங்க கலவரத்தை சாதகமாக்கிகிட்டு - உண்மையை வரவழைக்க - சரவணகுமாரை உங்க பங்களாவுக்குள்ளே அனுப்பிட்டு - நாங்க பின்னாடியே வந்தோம். உங்க ரெண்டு பேர்க்கும் தெரியாமே இந்த பங்களாவுக்குள்ளே நாங்க



ஊடுருவ முடிஞ்சதுக்கு - உங்க வேலைக்காரங்க கொடுத்த ஒத்துழைப்புதான்... காரணம்.''

சொன்ன கமிஷனர் - எஸ்.ஐ.விக்னேஷ்வரனுக்கு கண்ஜாடை காட்ட - அவர் கைவிலங்கோடு - ரத்ன சபாபதியையும் க்ருபாஷங்கரையும் நோக்கிப் போனார்.

சரவணகுமார் கமிஷனரோடு கை குலுக்க - அவர் கண்ணைச் சிமிட்டினார்.

''என்ன கழண்டுக்கறீங்களா...?''

''வீட்டுக்கு சீக்கிரமா போகணும் ஸார்... கோபமாய் இருக்கிற மதுலிகாவை சமாதானப்படுத்த இந்த ராத்திரி போதாது... ஏழெட்டு ராத்திரிகளை நான் வீணாக்க வேண்டியிருக்கும்.''

''புதுப்பெண்டாட்டி... பார்த்து ஹேண்டில் பண்ணுங்க...''

சொல்லிவிட்டுச் சிரித்தார் கமிஷனர் சகாயம்.